


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் வாய்மொழி

## விடிவுக்கு முன் இருட்டு!

வைகாசி ‘சுடரி’ன் வண்ண ஒலி எம்மைக் கவர்ந்தது. தலையங்கம் நெஞ்சை விழித்தது. எமது இனத்தின் விடிவுக்கு முன்வந்துள்ள இருட்டாகவே இதைக் கொள்ள வேண்டும். திரு. வேலணை வீரசிங்கம் அவர்கள் சொன்னதைப்போல். இன்றைய எந்தப் பொருளுக்குமே கவர்ச்சி அவசியம்தான், எனவே, ‘சுடரி’ன் வெளிக்கவர்ச்சியையும் சற்று அதிகப் படுத்துங்கள். மணிக்கவிதைகள் மனதைக் கவர்ந்தன. அண்ணே! சின்னண்ணே, பகுதியில் அமரர் கதிரவேற்பிள்ளையை எங்களுடன் உறவாட விட்ட கனக. மனோகரனுக்கு எங்கள் நன்றிகள்.

—கோவுஸ்ஸ, எல்ல.

## இடரின்றித் தொடர்க!

‘அன்னத்தின் கன்னம்’ என்ற கவிதைக்கு ஏற்றபடி நிர்மல் வரைந்த அட்டைப்படம் வைகாசி இதழை அழகு படுத்துகின்றது. ‘‘வசந்தம் வருமா’’? என்ற முல்லைமணி எழுதிய கவிதை பிரமாதம். மற்றும் பரிசுபெற்ற கதைகள், மணிக்கதைகள் சிறப்பாக அமைந்துள்ளது. மொத்தத்தில் சுடரே, நீ இன்றுபோல் என்றும் இடரின்றித் தொடர்க’

சோ. சவுந்தரராசா
தபாலதிபர், ஆலங்கேணி.

## கோடரிக் சாம்புகளுக்குப் படிப்பினை!

மூவர் எழுதிய அலைபாயும் நெஞ்சங்கள் சிறப்பான மையக் கருத்துடன் நிறைவு பெற்றது. நன்றி சொல்ல வேண்டும் என்ற மணிக்கதையில் சுதாவின் நன்றியோடு அதை எழுதிய முருகானந்தன் அவர்களுக்கும் எனது நன்றிகள். ‘‘கசாப்புக்கடை’’ ஆசிரியர் தலையங்கம் எங்கள் இன கோடரிக் காம்புகளுக்கு நல்லதொரு படிப்பினையாக அமைகிறது.

அ. தயாபரி, கொக்குவில் மேற்கு.

## வேஷங்கள் கலைந்தன!

தண்ணீர்க்குடமெடுத்து தனிவழியே தான்
நடக்கும்
வட்டக்கருவிழியாள் வடிவழகு என்ன
சொல்ல ?
கசாப்புக் கடைதனில் நாம் கலங்கித்
தவிப்பதை
கோஷமாய் எழுப்பிவிட்டு இத்தேசத்
தலைவர்கள்
வேஷங்களைப் பதிலால் கலைந்து விட்டாய்
காணுகின்றேன்
அலைபாயும் நெஞ்சங்களை நிலையாக்கிவிட்ட
முக்கோணக் கதையாசிரியர்களுக்கும்
இக்கால நங்கையரைச் சிந்திக்கும் வண்ணம்
‘நெஞ்சில் புகாத கற்பி’ற்கு கற்பனை யுருவம்
கொடுத்த
முத்து குணரத்தினம் அவர்களுக்கும்
சுடரே! நீ அளித்த பரிசுடன்...
உண்மையான பிரதிபலிப்பாய் விளங்கும்
‘தரிசனங்கள்’ தனை தந்த கோகிலா மகேந்திர
னுக்கும்
என் பாராட்டுக்கள்.

செல்வி. கங்கா - மங்கை
சரசாலை, சாவகச்சேரி.

## கண்ணீர் வழிந்தது!

வைகாசிச் சுடரில் இடம்பெற்ற ‘கசாப்புக்கடை, கண்டு கண்ணீர் உகுக்காமல் இருக்கமுடியவில்லை. ‘வசந்தம் எங்கே’ கவிதை இன்றைய சமுதாயத்தின் நிலையை அழகுற படம்பிடித்துக் காட்டுகின்றது. ‘நெஞ்சில் புகாத கற்பு’ பரிசுக்குரியதே ‘தரிசனங்கள்’ பரிசைப் பெற்றதனால் அதை வாசிக்கும் அரியவாய்ப்பு எங்களுக்கு அதாவது சுடர் வாசகர்களுக்குக் கிடைத்தது. மொத்தத்தில் சுடரில் இடம் பெறுபவை அத்தனையும் முத்துக்களே,

கெ. தர்மகுலராசா
2ம் வட்டாரம், நிலாவெளி.

## பிரமாதம்!

வந்து விட்ட துயருக்கப்பால்
அத்துயரக் கருத்தாங்கி
வெளிவந்த வைகாசி இதழில்
பரிசுக்கதை, தரிசனங்கள்
மணிக்கதைகள் பிரமாதம்
கவின்மிகு அட்டைப்படம்
கண்ணைப் பறித்தது!

அ. சுரேஸ் பொறியியல்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

(33ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்: கரிகாலன்
துணை ஆசிரியர்: அரி

வள்ளுவராண்டு: 2012
சுடர்: 7
ஒளி: 3
ஆனி, 1981
தொடக்கம்: சித்திரை 1975

வெளியீடு:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை
கொழும்பு—12.
தொலைபேசி: 23411

சுடர்
CUDAR
(கலை இலக்கியத் திங்களிதழ்)

# இடைவேளைக்குப் பின் ......?

தமிழ் மாநிலத்தில் — யாழ்ப்பாண மாவட்டத்தில் — ஜே. ஆர். ஆட்சியின் பொலிஸ்—இராணுவப் புலையர்கள் ஆடிய ஊழிக்கூத்து இடைவேளைக்காக ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது.

மே மாதச்சுடரின் தலையங்கத்தை எழுதிய வேளையில் அதி உத்தமனுரின் ஆணைக் குட்பட்ட உன்மத்தர்களுடைய வெறியாட்டத்தின் முதல் காட்சி அக்கினி சாட்சியாகத் தொடங்கியிருந்தது.

**அதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் தாங்கிய கொடுமைகள்—தரிசித்த கோரக் காட்சிகள்—கொலைகள் கொள்ளைகள்—தீச்சுவாலைகள்—தாக்குதல்கள் —ஐயகோ!**

சொறிபிடித்த சோரத்தர்பாரின் காவல் நாய்கள் வெறிபிடித்து எமது மக்களை விரட்டி விரட்டிக் கடித்தன. தங்கத் தமிழ்த் தாயகம் காக்கி வெறியரின் வேட்டைக் காடாயிற்று. அச்சமும் பீதியும் அவலமும் மக்களைச் சூழ அராஜகம் கொக்கரித்துக் கொலுவீற்றிருந்தது. இந்தக் கோரத்தாண்டவத்தினுல் விளைந்த அழிவுகளும் அனர்த்தங்களும் ஏற்கனவே விபரமாக வெளியாகியிருக்கின்றன.

இடைவேளைக்குப்பின் இந்த நீச நாடகம் எந்த வேளையிலும் மீண்டும் தொடங்க லாம் — அராஜகம் தொடரலாம்.

குருதி வேட்கையிலே சுருதி சேர்க்கின்ற இந்தக் கோரக்கூத்தின் அடுத்த காட்சிதான் உச்சக் கட்டம்.

சிங்கள இனவெறியரின் பசிக்கு தமிழனின் பச்சை ஊன் — தாகத்திற்கு பச்சிரத் தம்—கொள்ளைக்கும் கொள்ளிக்கும் தமிழன் வருந்தி ஈட்டிய பொருள். இவ்வாருக, காலத் துக்குக் காலம் பந்தியிலே பரிமாறிய தமிழனின் பரிதாப அனுபவங்களுக்கு ஒரு பரிணும வளர்ச்சியுண்டு. அதாவது:

**கட்டம் 1 :** தாக்குண்ட வேளையில் காவற்படையினரும் ஆயுதப்படையினரும் தமிழ னுக்குப் பாதுகாப்புத் தந்தமை.

**கட்டம் 2 :** அவ்வேளையில் குறித்த படையினர் பார்வையாளர்களாக வேடிக்கை பார்த்தமை.

**கட்டம் 3 :** அவ்வேளையில் குறித்த படையினர் தாக்கியவர்களுக்குப் பாதுகாப்பும் பக்கபலமும் தந்தமை.

**கட்டம் 4 :** குறித்த படையினரே நேரடியாகவும் வெளிப்படையாகவும் தமிழ் மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டமை.

**நான்காவது கட்டம் நடந்து முடிந்திருக்கிறது.** குருதிச் சுவை கண்ட கூலிப்படையின் கும் மாளம் அடியோடு ஓய்ந்துவிடவில்லை. தாக்குண்ட தமிழினம், தன் புண்களை நாக்கினுல் நக்கிக் கொண்டு நெடுமூச்செறிந்து நிற்கிறது.

**அடுத்த கட்டம்...?** அபாய அறிவிப்பை அனைத்துலகத் தமிழரும் கேட்பீராக!

**கட்டம் 5 :** சிங்களப் பேரினவாதப் பெரும்புயல் வீசுகின்ற வேளையிலே படை யணியை சேர்ந்தவனும் — சேராதவனும் தமிழர் சங்காரத்தில் பங்கேற்கப் போகிருன்.

அபலைத் தமிழினம் இன்னேர் அவலத்தைத் தாங்குமா?

**எனவே, அந்தப் பிரளயத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு திட்டமிட்டு ஒரு சூழ்ச்சி செய்குவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக் குமுறல்!

—"இளங்கோ அமீர்"

பாண்டியனின் அரியணையில் ஓங்கி நின்று
படைமுரசு மகிமையையும் தாங்கி நின்று
ஆண்டதமிழ் மொழியிங்கே காணுகின்ற
அவலத்தால் என்னுள்ளம் வேகுதம்மா!
நீண்டதொரு வரலாற்றை நெஞ்சி லேற்று
நெறிவழியில் எம்முன்னோர் தந்த பாடம்
மாண்டதுவோ? நீதியது மடிந்த தாமோ
வரலாறுத் தமிழ்மகனே துவண்ட தேனோ;

★ ★

செந்தமிழின் இனிமையினை மீன்கள் பாடும்
சிறப்புமிகு மட்டுநகர் மண்ணி லின்று
அந்தோ! யான் என்சொல்வேன் பெருந் தெல்லாம்
அவலத்தைக் காட்டுதம்மா! எங்கள் ஊரை
மந்தமென எண்ணுகிறார் பலகை தன்னில்
'மடகலப்பு' எனத்தமிழைக் கொல்லுகின்றார்
சிந்திக்க வில்லையாம் இன்னு மிங்கு
திரிவைக்கும் வேலைகள் தொடருதம்மா!

★ ★ ★

கேளுங்கள் சோதரரே! எனது நெஞ்சில்
கிளர்ந்திட்ட வேதனையைக் கொட்டி விட்டேன்
வாழவரும் சந்ததிக்குப் பணிகள் செய்து
வழிசமைக்கும் தொண்டுதனை விட்டு விட்டு
வேளைக்கு உணவுண்டு உறங்கி விட்டால்
விருப்பமெலாம் தீர்ந்ததெனும் எண்ணந்தன்னை
ஆழத்தில் குழிதோண்டிப் புதைத்து விட்டு
அணிவழியில் முன்நிற்க! வாரீர் வாரீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழில் கொஞ்சும் அழகு நகராம் யாழ் நகரை ஐ. தே. க. ஏகாதிபத்தியத்தின் ஏவல் கூலிகள்—தார்மீக சனுதிபதியின் 'தர்ம வீரர்' கள் பாழ்படுத்திவிட்ட கொடுமை தற்செய லாக நிகழ்ந்து விட்ட ஒரு சம்பவமல்ல; மிக நீண்ட நாட்களாக திட்டமிட்டு வகுத்து வைத்த கைங்கரியமே கச்சிதமாக நிறை வேற்றப் பட்டிருக்கிறது.

யாழ். மாவட்டத்திலே இனி விட்டு வைக்க எதுவும் இல்லை என்கிற அளவுக்கு தமிழர்களின் உடைமைகளும், சொத்துகளும் தீயிட்டு கொளுத்தி நாசமாக்கப் பட்டிருக் கின்றன; பல உயிர்கள் வேட்டையாடப் பட்டிருக்கின்றன.

எம் இனிய தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்கள் இந்த வெறியர்கள் தேடிச் சென்ற வேளை தம் அலுவலகத்தில் இருந்திருந்தால்..... நமது நாடாளுமன்ற உறுப்பினர் வெ. யோ கேஸ்வரன் அவர்கள் இந்த வேட்டை நாய் களின் கையில் சிக்கியிருந்தால்....... எத்தனை பெரிய கொடுமைகள் நிகழ்ந்துவிட்டிருக்கும் நினைக்கவே நெஞ்சம் பதறுகிறதே?.

வெறிபிடித்த கொடியவர்கள் மூட்டிய தீயினுல் எரிந்தது யாழ் நகரம் மட்டுமா? உலகின் மூலைமுடுக்குகளில் எல்லாம் வாழு கின்ற ஒன்பது கோடி தமிழர்களின் நெஞ்சங் களுமல்லவா பற்றி எரிகின்றன—செந்தணலாக தகிக்கின்றன — எரிமலையாய் குமுறுகின்றன.

இரு அமைச்சர்கள் யாழ்நகரில் தங்கி யிருந்த வேளை இந்தளவு கொடுமைகளை புரி கின்ற அளவுக்கு இந்த ஏவல் பிசாசுகளுக்கு எங்கிருந்து வந்தது இந்த துணிச்சல்? இவர் களை ஆட்டுவித்த சூத்திரதாரிகள் யார்?

'மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலை மக்கள் எதிர் பார்த்திருந்த கால கட்டத்தில் பலமான ஒரு பின்னணி இல்லாமல் இந்த பேய்த் தனமான வெறியாட்டம் நிகழ்ந் திருக்க முடியுமா?

கடந்த மாத ஆசிரிய தலையங்கத்தில் ஆசிரியர் திரு. கரிகாலன் அவர்கள் குறிப் பிட்டது போல புதிதாக இவை நடந்துவிட வில்லை. காவல் படையினரின் கட்டவிழ்த்து விடப்பட்ட அட்டகாசங்கள் 1977 ஆம் ஆண்டு ஆவணி மாதத்திலும், 1979 ஆம் ஆண்டு அவசரகால நிலையின்போதும் நடைபெற்றி ருக்கின்றன. பல தமிழ்ப் பெரியார்களின் (சிலைகள்) தலைகள் துண்டாடப்பட்டன; எம் உடன் பிறப்புக்கள் சிலர் சித்திரவதை செய்யப்பட்டு உயிர் பறிக்கப்பட்டனர்.

ஆவணி அமளி பற்றி விசாரித்த சன் சோனி கமிஷனின் அறிக்கை எங்கே? அவசர கால கொடுமைகள் பற்றி விசாரித்த பாரா ளுமன்ற தெரிவுக்குழு எங்கே?

இந்த கொடூரங்களைப் புரிந்தவர்களுக்கு கிடைத்தது - தண்டனையா? இல்லை — பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றங்களே!

கடந்த காலங்களில் அட்டூழியம் புரிந்த வர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தால் இன்று யாழ் நகருக்கு இந்த அவல நிலை ஏற்பட்டிருக்குமா?

எனவே, நடந்து முடிந்துவிட்ட படுபாத கங்களுக்கான முழுப்பொறுப்பையும் ஆட்சி யினரே ஏற்க வேண்டும்.

இந்த மாபெரும் கொடுஞ் செயல்கள் நடைபெறுவதற்கு ஆட்சி அதிகார இயங்கு சக்தி எந்த அளவுக்கு துணைபுரிந்துள்ளது என்பதை நீதி பூர்வமாக கண்டறிய வேண்டு மானுல் — அதற்கு சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப் படவேண்டியது அவசியமாகும்.

இந்த சர்வதேச விசாரணைக் கமிஷன் ஜூன் நான்காம் திகதி தேர்தலின் போதும் நடைபெற்ற 'ஜனநாயக கொலை' பற்றியும் விசாரணை செய்ய வழி வகுக்கப்பட வேண்டும்.

ஒரு ஜனநாயக நாட்டின் பெருமை அந்த நாட்டின் சிறுபான்மை இனத்தின் நலன்களை பாதுகாப்பதிலேயே தங்கியிருக்கிறது. ஆனுல் இங்கு நடப்பதென்ன? ஜனநாயகமா? அதர் மிஷ்டமா?

தமிழ் மக்களின் மனங்கள் வேதனைப் பிழம்பால் நொய்ந்திருந்த வேளை தேர்தலை யாவது ஒழுங்காக நடத்தினுர்களா? எத்தனை தில்லு முல்லுகள்? எத்தனை குழறுபடிகள்?

அவசர காலச் சட்டத்தின் கீழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு கட்டுப் பாடு விதித்து விட்டு தேர்தலை நடத்திய சம்பவம் முன்பு எப்போதாவது, நடைபெற்றிருக் கிறதா?

இந்த லட்சணத்தில் சர்வஜன வாக்குரி மையின் பொன்விழாவை கொண்டாடி மகிழப் போகிறுர்களாம் — இது கசாப்புக் கடைக்காரன் காந்திக்கு விழாவெடுத்த கதை மாதிரியல்லவா இருக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில்கள்

## கரிகாலன்

**வே. லோகேஸ்வரன்,**
கோப்பாய், வடக்கு.

**கே:** கலைஞர் மீது கூறப்பட்டுள்ள புகார்களைத் திரும்பப் பெறுவது பற்றி?

**ப:** புகார் கலந்திருக்கிறது. வானம் வெளுத்திருக்கிறது— கலைஞருக்கு.

**கே:** வடக்கு கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட த.வி.கூ. அபிவிருத்திசபை உறுப்பினர்கள் தமிழ் ஈழத்திற்கு என்ன பங்களிப்புசெய்யப் போகிறார்கள்?

**ப:** எங்கள் தங்கத் தமிழ் மண்ணை அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து காக்கவேண்டும். இதனைச் சாதிக்க முடியாவிட்டால் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியேற வேண்டும்.

**கே:** கலைஞரின் குறளோவியத்தைப்பற்றி கவிஞர் கண்ணதாசன் கேலியாகப் பேசியும் எழுதியும் வருகிறாரே?

**ப:** கலைஞரின் அரசியல் பற்றி கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆயினும், தமிழ் உரைநடைக்கு முறுக்கேற்றியவர்— மெருகிட்டவர் கலைஞர். கலைஞரின் இலக்கிய ஈடுபாடு இறுக்கமானது. கலைஞர் திறந்த பாதையிலே புகுந்தவர்தான் கவிஞர். தாம் சுவைத்த கடைசி எலும்புத்துண்டை யார் தம்முன் வீசினார்களோ அவர்களுக்குத்தான் கவிஞர் விசுவாசம்—அடுத்த துண்டு வீசப்படும் வரை.

**கே:** அபிவிருத்திச்சபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று பேசியவர்கள் யாழ்ப்பாண அபிவிருத்தி சபைத் தேர்தல் முடிவைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

**ப:** அவர்களில் இருவகை. பகிஷ்கரிப்பினால் விடுதலை இயக்கத்திற்கு வலிமை சேரும் என நம்பிய விசுவாசிகளும் உண்டு; தமக்கு தேர்தலில் வாய்ப்பு மிகும் என அங்கலாய்த்த விரோதிகளும் உண்டு. 'அப்பாடா! இயக்கம் பிழைத்தது'' என்று விசுவாசிகள் ஆறுதலடைவர். ''அடடாவோ! காரியம் கெட்டுப்போச்சே'' என்று விரோதிகள் சலித்துக் கொள்வர்,

**கே:** 'சுடர்' பிறநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறதா? எந்தெந்த நாடுகளுக்கு?

**ப:** சுடரில் ஒரு சிறப்பு. பிற நாட்டிலிருந்து (சிறீலங்கா) நம் நாட்டுக்கு (தமிழ் ஈழம்) இறக்குமதி செய்யப்படுகிறது. (மல்லிகை ஆசிரியர் தமது இதழில் குறிப்பிட்டது போல,) இதே அச்சகத்தில் தபால் முத்திரைகளையும் அச்சடிக்கலாமென்றால் தமிழ் நாட்டுக்காவது தனிப்பட அனுப்பலாம். ஒரு பிரதிக்கு ரூபா 4/50 ஆகிறது. முடிகிற காரியமா?

**முத்து சிவலிங்கம்,**
முள்ளியவளை.

**கே:** அமைச்சர் இராசதுரை அண்ணன் மந்திரிசபைக் கூட்டங்களில் ஆலோசனைகள் கூறுவதுண்டா?

**ப:** நியாயமான சந்தேகம் தான். கோவில்களில்அர்ச்சனைக் காசுக்கு உச்சவரம்பு விதிக்க— வேண்டுமா? என்பது போன்ற அதி முக்கிய விடயங்களில் மட்டும் அண்ணனது ஆலோசனையைக் கேட்பார்கள்.

**கே:** கூட்டணி இராசதுரைக்கும் யூ. என். பி. இராசதுரைக்கும் வித்தியாசம் என்ன?

**ப:** இங்கே அணியோடு அணியானார். அங்கே பிணியோடு பிணியானார்.

**த. பாலசுப்பிரமணியம்**
புத்தூர் வடக்கு.

**கே:** சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் எதற்காகத் தாடி வளர்க்கிறார்.

**ப:** தாடியை யாரும் தண்ணீர் ஊற்றி பசளையிட்டு வளர்ப்பதில்லை. அது தானாகவே வளரும். எதற்காக வழிப்பதில்லை என்று கேளுங்களேன்.

**ச. நற்குணம்,**
அரியாலை கிழக்கு
யாழ்ப்பாணம்.

**கே:** மல்லிகை, சுடர், சிரித்திரன் — இவற்றை தரத்திற்கேற்ப வரிசைப்படுத்துங்கள் பார்க்கலாம்.

**ப:** மூன்றுமே எம் மண்ணின் மலர்கள். தரம்பிரிப்பது எமது வளர்ச்சிக்கு ஆரோக்கியமான முயற்சியல்ல.

### பதில்கள்.

1. அண்மை அனுபவங்களினால், தமது முகவரியை தராதவர்களின் கேள்விகளை வெளியிட முடியவில்லை. தரும் முகவரியை சுருக்கி வெளியிடுவது எமது வசதிக்காக.

2. ஒருவர் ஒரே தடவையில் கூடியபட்சம் மூன்று கேள்விகளை மட்டுமே கேட்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே:** பூண்மாத மல்லிகை இதழ் தலையங்கம் பார்த்தீர்களா?

**ப:** பார்த்தேன். மல்லிகைக் கொடியில் தீக்கொழுந்து துளிர்த்திருக்கிறது. பொலீஸ் வெறியாட்டத்திற்கு எதிராக போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார் ஆசிரியர்.

**இ. சண்முகம்**
களபூமி, காரைநகர்.

**கே:** கடவுள் தங்கள் முன் தோன்றினால் என்ன கேட்பீர்கள்?

**ப:** நீர் தான் அந்தத் தான்தோன்றி ஈஸ்வரனோ? என்று கேட்பேன்.

**கோ. மணிவண்ணன்**
புங்குடுதீவு.

**கே:** சுடர் கலைஞர் சார்பானது—எம். ஜி. ஆர். எதிர்ப்பானது என்கிறேன்.

**ப:** கலைஞர் எம் சார்பானவர்.

**கே:** தெரியாமல் தான் கேட்கிறேன். எம். ஜி. ஆரை விட கலைஞர் எந்த விதத்தில் சிறந்தவர்?

**ப:** தெரிந்து கொண்டு தான் கேட்கிறேன். எந்த விதத்தில் குறைந்தவர்?

**கே:** "அண்ணா — ஒரு நோக்கு" என்று நூல் எழுதினீர்களே, அதேபோல் அண்ணாவின் இதயக்கனி பற்றி "எம். ஜி. ஆர் — ஒரு நோக்கு" என்று எழுதுவீர்களா?

**ப:** எழுதலாம். "எம். ஜி. ஆர். ஒரு ஜோக்(கு)" என்று.

**கருணாகரன்,**
சுதுமலை, மானிப்பாய்.

**கே:** சீதனக் கொடுமையை ஒழிப்பதற்கு என்ன செய்யலாம்.

**ப:** மூட்டைப்பூச்சி மருந்து பாவிக்கலாமா?

**கே:** நண்பனின் சகோதரியை அவள் கணவன் சீதனக் காசு பத்தாயிரத்தையும் திருப்பிக் கொடுத்து தாய் வீட்டுக்கு அனுப்பிவிட்டான். மீதிப் பணம் பத்தாயிரத்துடன் வந்தால்தான் பெண்ணை ஏற்பானும். என்ன கொடுமை?

**ப:** கொடுமை தான். (சொல்கிறேனே என்று கோபிக்காதீர்கள்) அத்துலத்முதலி, அத்துலத்முதலி என்றொரு அமைச்சர் இருக்கிறார். கணக்குப் போடுவதில் மகா சமர்த்து. பத்தாயிரத்தையும் கையில் கொடுத்து அவரை அத்தானிடம் அனுப்புங்கள். இருபதாயிரத்தைவிட பத்தாயிரம் அதிகம் என்று அத்தானுக்கு கணக்குப் போட்டுக்காட்டி சமாளித்து விடுவார். (அண்மையில் அபிவிருத்தி சபைத் தேர்தல் புள்ளி விபரங்களை இப்படி தலைகீழாகப் புரட்டி காட்டிப்பேர் 'போனவர்')

## கோள(ா)று பதிகம்!

1. சென்ற இதழில் **கேள்வி — பதில்** பகுதியில் சில கேள்விகளுக்கான பதில்களும் கேட்டவர்களின் பெயர்களும் வேறு கேள்விகளுடன் ஒட்டிக் கொண்டன.

2. அட்டைப் படம் அழகுச் சுவைக்குச் சவாலாக அமைந்து விட்டது. எம்மையும் மீறி நிகழ்ந்த கைங்கரியங்கள் இவை. மன்னிக்கவும்.

—ஆசிரியர்.

**செல்வி ஜெயா—சபா,** மல்லாகம்.

**கே:** பெயரிடாது முற்பக்கத்தில் ஒரு கேள்வியையும் மறுபக்கத்தில் பெயரிட்ட இரு கேள்விகளையும் போட்டு சிண்டு முடிப்பையும் விஷமத்தனத்தையும் காட்டி விட்டீர்கள். இப்போ கூறுங்கள். விஷமத்தனத்தால் மிஞ்சுவது என்ன?

**ப:** இதோ, சுடருக்கு இன்னுமொரு கேள்வி.

**கே:** வெளிநாட்டில் உதவி பெறுவது அவமானம் என்று நிதிமந்திரி கூறியுள்ளாரே. கண்துடைப்பா? கவலையா?

**ப:** 'சீச்சீ! இந்தப்பழம் புளிக்கும்' என்ற பழைய கதை.

**கே:** நம் தலைவரின் அமெரிக்கப் பயணம் ஆட்சியாளருக்கு சூருவளியாக உள்ளதே ஏன்?

**ப:** அடிப்பார்களாம். கொல்வார்களாம். நாம் அடுத்தவனிடம் சொல்லி அழக்கூடாதாம். இவர்களுக்கு ஆத்திரம் வருமாம்.

**கே:** தமிழீழம் பற்றியெரியும் வேளையில் அங்கிருந்து பிடில் வாசித்துக் கொண்டிருந்த அமைச்சர்கள் நம் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்எடுத்துள்ளார்களே. அது எதைக்குறிக்கிறது?

**ப:** பிடில் வாசித்த நேரத்தில் பாராளுமன்ற மரபுகளைப் பற்றிய நூலை வாசித்திருக்லாம்.

**இ. இரத்தினகுமார்,**
சிவன்கோவிலடி வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை

**கே:** தமிழக சஞ்சிகைகளைப் படிப்பதற்கு போதுமான ஆங்கில அறிவு தேவையாயிருக்கிறதே. இப்படியே போனால் தமிழின் நிலை என்னவாகும்?

**ப:** "மெல்லத் தமிழினிச் சாகும்" (பாரதி)

**செல்வி சபாபதிப்பிள்ளை**
**விஜயலக்சுமி** மல்லாகம்.

**கே:** சர்வாதிகாரத்தின் முதற்படி எது?

**ப:** தம்மிஷ்டம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே: தமிழ் ஈழத்தில் நடைபெற்ற வன்செயல்களைப் பார்த்தும் கண்கூடாகக் காரணம் தெரிந்தும், இத்தனைக்கும் காரணம் த. வி. கூட்டணி என்று யாழ். மாவட்ட அமைச்சர் கூறுகிறாரே! இதற்கு நீங்கள் கூறும் பதில் என்ன?

ப: விஜயக் கூனின் கூன் விழுந்த பேச்சு ஒரு பொருட்டல்ல. ஆமாம் போட்டுக் கொண்டும் ஆலவட்டம் சுற்றிக் கொண்டும் இன்னும் சில தமிழர் அமைச்சருடன் நிற்கிறார்களே. இதற்கு முதலில் பதில் காண வேண்டாமா?

கே: புலியுடன் எதிர்த்தால் புலியின் வயிற்றுள் தான் போகவேண்டும் என்று அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார். இதன் கருத்து என்ன?

ப: அர்த்தமில்லாமல் பேசுபவருக்குப் பெயர்தான் அமைச்சர். புலியின் வயிற்றுள் போனாலும் அலியாரின் (யானை) வயிற்றுள் புகாதிருந்தால் போதும்.

**மா. மானசூரியன்,**
அச்சுவேலி வடக்கு.

கே: கடந்த யாழ். மா. அ. சபைத் தேர்தல் வாக்களிப்பில் சிறுபான்மைத் தமிழ் சகோதரர்களின் பங்களிப்பு எத்தகையது?

ப: பெரும்பான்மையானது.

கே: யாழ். வாக்காளர் பற்றி உமது அபிப்பிராயம்?

ப: அசகாய சூரர்கள். அக்கறையின்றி படுத்திருந்தவர்கள், காக்கிச்சட்டைகளின் அட்டகாசத்தைக் கண்டதும் சிலிர்த்துக் கொண்டு வேங்கை போல் பாய்ந்து யானையை விரட்டியடித்திருக்கிறார்களே!

கே: மா. அ. சபைத் தேர்தலில் தமிழ் வாக்காளர் பகிஷ்கரித்திருந்தால்......?

ப: ஆனைப்பசிக்கு அறுசுவை உண்டி கிடைத்திருக்கும்.

**நிலா தமிழின்தாசன்,**
நிலாவெளி — 3

கே: கரிகாலரே! யாழ் நகரைப் பாழ் நகராய் ஆக்கிய காட்டு மிராண்டித்தனம் பற்றி ஏதாவது கூறுங்களேன்.

ப: இனியும் அடிக்கடி நடக்கும். இத்தகைய வெறியாட்டங்களை விவரிப்பதற்கு புதிய சொல்லாக்கம் தேவைப்படும். காக்கிமிராண்டித்தனம் என்போம்.

கே: தமிழீழ மக்கள் தலை நிமிர்ந்து வாழும் நாள் விரைவில் ஏற்படும் என்பதற்கு ஏதாவது அறிகுறி உண்டா?

ப: அறிகுறியோடு திருப்தி படும் கட்டத்தை தாண்டி விட்டோம்.

கே; தமிழீழ விடுதலைக்கு எந்தவகையான போராட்டம் தேவை என்பதை இனியாவது நம் தலைவர்கள் உணர்வார்களா?

ப: உணர்வார்கள். அந்த வகையான போராட்டத்திற்கு ஆளணி வேண்டுமென்பதையும் அறிவார்கள். அந்த அணியில் நீங்கள் உண்டா?

**மூ. கதிரேசன்**
பிரதான வீதி, மாத்தளை

கே: யாழ்ப்பாணம் மா. அ. தேர்தலில் அமைச்சர் தில்லுமுல்லுகள் செய்தும் யூ. என். பி யினால் வெல்ல முடியவில்லையே.

ப: காப்பியடித்தும் பெயிலான மக்கு!

கே: யூ. என். பி. அமைச்சரவையில் அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் ஒருவர் தான் 'ஜென்டில்மன்' என்று நினைக்கிறேன்.

ப: இதர அமைச்சர்கள் அனைவரும் 'லேடீஸ்' என்கிறீர்களா?

கே: அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் பேச்சுக்களைப் பார்த்தீர்களா. நியாயமான மனிதராகப் படுகிறாரே?

ப: நல்லவேளை, 'படுக்கிறாரே?, என்று கூறாமல் விட்டீர்கள். அமைச்சர் அல்விஸ் ஜே. ஆரின் அழகுமுகம். மத்தியூ மாத்தயா கோரமுகம், இரண்டுமே ஜே. ஆரின் முகங்கள்தான். தர்மத்தின் காவலன் முருகனுக்கு ஆறுமுகம். தர்மிஷ்ட நாயகருக்கு நூறுமுகம். ஜாக்கிரதை!

**மி. அருள்மொழிராஜா,**
நிலாவெளி —3

கே: என்ன கரிகாலனாரே! வைகாசிச் சுடரில் குறும்புத்தனத்திற்கும் விஷமத்தனத்திற்கும் வித்தியாசம் தெரியாத 'கேள்வி'யை என் தலையில் போட்டு விட்டு என்னுடைய 'தூங்குகின்ற தமிழனுக்கு ஓங்கி மார்பில் குத்தடா, என்ற கேள்வியை யாரோ தலையில் கட்டி விட்டீர்களே! என்ன தூக்கமா? இல்லை..........

ப: சேச்சே! ஓங்கிய கத்தியுடன் நீங்கள் நிற்கும்போது தூங்குவேனா? தூக்கமல்ல, —அச்சக ஊழியரின் தாக்கம்.


---

## கவிஞர்கள்!

தமிழ் என்ற மலர் நுகர
தாவி வரும் வண்டினமாய்
அமுதெனவே அதைச் சுவைத்து
அணு அணுவாய் அனுபவித்து
ஏறிவிட்ட போதையிலே
எழுதிடுவார் பல கவிகள்!

கலைச்செல்வி—
—மண்டைதீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"உமியிலிருந்து சிமேந்து செய்யப் போகிறார்களாம்"

"ஐய்யோ நெல்லின் விலை மேலும் ஏறப் போகுதோ"

* * * *

"என்னப்பா கொம்பசிட்டர், அழைப்பிதழில் மாநாட்டு மந்திரி என்பதற்குப் பதிலாக மாட்டு மந்திரி என்று அச்சடித்திருக்கிறதே"

"ஒரு எழுத்துத்தானே குறையுது பில்லில் குறைத்துக் கொள்கிறேன்".

* * * *

"ஏன் இவருக்கு திடீரென்று பைத்தியம் பிடித்துவிட்டது?

"அவர் தேர்தலுக்குப்பின் நாலு நாள் தொடர்ந்து இலங்கை வானொலியில் செய்தி கேட்டார்.

* * * *

"நமது நாட்டின் பொருளாதாரம் 12½ மடங்கு பெருகியிருக்கிறது.

"எதைக் கொண்டு இப்படிச் சொல்கிறீர்கள்?

"முன்பெல்லாம் டீ ஒன்று பத்துச்சதம் இப்போது ஒரு ரூபாய் இருபத்தைந்து சதம்"

* * * *

"ஏன் இவர் இப்படி தலைதெறிக்க ஓடுகிறார்?

"பொலிஸ்காரர் பொதுமக்களின் தோழன் என்றேன்"

* * * *

"என்னப்பா இவர் பிரயாணப்படி வவுச்சரில் ஸ்டேசனில் இருந்து டவுனுக்கு 2 மைல் என்று போட்டிருக்கிறார். அரைமைல் கூட இருக்காதே.

"வெயில் காலம் அல்லவா சார். உஷ்ணத்தில் பாதைநீண்டிருக்கலாம்.

* * * * * *

"ஏன் இந்தக் கிராமத்துக்கு இப்போ பஸ் சேவை இல்லை?

"தேர்தல் முடிந்து விட்டதே அதனால் தான்"

**மணி**

**படி — பின் — பிடி**

[பட்டம் பெற்று வேலை தேடி அலையும் இருவரின் உரையாடல்]

**ஒருவன்:** பட்டம் பெற்றும் பறக்க முடியலையே

**மற்றவன்:** உன் பட்டத்திற்கு வால் இல்லையே. என்ன செய்வது, இனியாவது வால் பிடி. பட்டம் வானுயரப் பறக்கும்.

* * * *

**MONEY MOON!**

[காதல் ஜோடியின் உரையாடல்]

**காதலி:** என்னங்க நீங்க, எப்போது என்னைக் கல்யாணம் பண்ணப் போறீங்க.

**காதலன்:** உன் அண்ணன் வெளிநாட்டுக்குச் சென்று இரு வருடம் முடிந்தபின், முதல் வேலை நம் கல்யாணம்தான்.

* * * *

**தாராள மனசு!**

**தொழிலாளி:** ஐயா! பொழுது விடிந்தால் பொழுது சாயும் வரையும் ஒரே வேலையாய் இருக்கே. ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலமாவது ஓய்வு கொடுக்கக் கூடாதா?

**முதலாளி:** பொறுமையாய் இரு. 55 வயது வர 12 மணித்தியாலமும் ஓய்வு தருவேன்.

* * * *

**—ரத்ன முருகுப்பிள்ளை**

**இடியப்பர்!**

**ஒருவர்:** என்னுடைய பழைய வீட்டை இடித்து புதுவீடு கட்டப் போறன்......இப்ப இடிக்கிறதென்றாலும் கூலி நியாயமாகப் பிடிக்கும்...

**மற்றவர்:** ஏன், அன்றைக்கு யாழ்ப்பாணத்தில இடித்தவர்களிட்டைச் சொன்னால் இலவசமாக இடித்துவிடுவார்களே!

**—கதிர் மாணிக்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிச்சரங்கள்

## நாங்கள்!

ஸ்ரீதேவிப்பிரியா

காலவெள்ளத்தில்
கவிழ்ந்து போகும்
காகித ஓடங்கள்!

தேயிலைத்தூரில்
தேங்காய் மாசி தேடி வந்த
'தென்னாலி ராமர்கள்!

அரசியல் வாதிகளின்
மாயா ஜாலங்களைக் கண்டு
உண்மை நிகழ்வுகள்
என நம்பி ஏமாறும்
ஏமாளிகள்!

நாட்டுக்காகவே உழைத்து
நல்ல ரத்தம் கெட்டு
இறுதியில் - நாட்டு-
வாசிகளால் -
கொ(ல்ல)ள்ளை
அடிக்கப்படும்
கோமாளிகள்!

## வறுமை!

சு. கருணாநிதி

ஆசைத்
திரியை-
தேவையெனும்
நீர்க்கொதிக்க-
உடைமைகள்
வற்றி
விரிவடையும்
ஆவியே
வறுமை.

## கவிஞன்!

மா. இராஜலிங்கம்

அகிலத்தின் இயற்கையை,
ஆளவும், அசைக்கவும், அழிக்கவும்
முகிழ்த்தெழுந்த மனிதனே
முத்தமிழ்ப் பாக் கவிஞன்

## கர்ப்பத்தடை!

வி. ஆர் தங்கவேல்

மனிதகுலவர்க்கத்தை
அதுவும் !..... ......
தமிழினமானிடத்தை
பூண்டோடு அழிப்பதற்கு
புதிதாக கண்டு பிடித்த
பொல்லாத ஆயுதம்.

## மயங்காதே!

பொ. அருந்தவநாதன்

மையல் விழி வெட்டால்
மதன் உனைச் சாய்த்து
மனதைப் பறித்து
மாறுக்கவலை தரும்
மாயப் பொம்மைகளின்
மடந்தை அழகு கண்டு
மதனே நீயும்
மயங்காதே.

## பள்ளியறையிலே!

முருகு

நித்திரை கொள்வதும்
பள்ளியறையில்தான்!
வித்தைகள் கற்பதும்
பள்ளியறையில்தான்!!

## இரவு!

இரா. கௌரிநாதன்

ஒளியின் மரணம்
இருளின் ஜனனம்
உணர்வு அலைகள்
உறவின் கரையில்......
முடிவைக் காணும்
— அந்த......
முடிவின் தொடர்வில்
புதிய சகாப்தம்
படைக்கும் நேரம்

## எத்தனை எத்தனையோ

சு. யோகராசா

சிறுமையோ உலகில்
சிங்கார நடைபுரியும்
சாதித் திமிரின்
சாகா நினைவுகள்
எண்ணத் திரையினில்
நாளும் வட்டமிட்டு
நெஞ்சினில் மோதிடும்
நினைவுகள் தான்
எத்தனை எத்தனையோ!

## பிரசவம்!

ச. புஷ்பகுமார்

ஒரு தாயின் வேதனை ஓலத்தில்
ஒரு சேயின் ஜனன ஓலம்
ஒரு இனத்தின் பெருக்க ஓலத்தில்
ஒரு இனத்தின் வீழ்ச்சி ஓலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் திருமணங்கள்

திக்குவல்லை கமால்

சரீஃபா அலங்கார மேடையில் அழகாக அமர்த்தப்பட்டிருந்தாள். எப்படியெல்லாம் எழிற்கோலத்தை எழுப்ப முடியுமோ அப்படியெல்லாம் அவளது உடலைப் போர்த்தியபடி அழகு முகாமிட்டிருந்தது. இனி அப்படியொரு நாள் வரப்போவதில்லையே! அதனால் தானோ இத்தனை பிரயத்தனம்?

மேக மண்டலம் ... நட்சத்திரங்கள் ... பிறைநிலா...இவற்றின் மத்தியிலே அமர்வு.. ...! இப்படியாக கிராமியக் கலைஞனொருவனின் கற்பனைச் சோடனைப்பந்தல் மணப்பெண்ணுக்குப் பின்னணியாக அமைந்திருந்தது.

எங்கும் ஒரே கலகலப்பு. கல்யாண வீடென்றால் அதற்கு எப்படிக்குறைச்சல் இருக்க முடியும்? அறிந்த தெரிந்தவர்கள், உற்றார் உறவினர்கள்... போதாக்குறைக்கு இசைப் பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டிருக்கும் வானொலிக் கருவிகள்!

எங்கும் ஒரே ஜிலுஜிலுப்பும்கூட....எல்லா வகைத் துணிகள்...சாரிகள்...... ஸூட்டுகள் அனைத்துக்கும் இலாம் விரும்பா விளம்பர ஸ்தாபனமா அது? அவற்றுக்கு பக்க ஒத்துழைப்பாக பல்வேறு வர்ண ஜால மின்விளக்குகள்...

இவை அனைத்துக்கும் காரணகர்த்தாவான கதாநாயகி சரீஃபா மௌனப் பொம்மையாய் ஆட்டம் அசைவின்றி மேடையிலேஅமர்ந்திருந்தாள்.

மனதுக்குள் பொங்கிஅலையெழுப்பும்இன்ப நினைவலைகள், அதுஅவளுக்கின்றிவேறு யாருக்கும் அவ்வேளையில் புரிந்துவிடாத தொருமெல்லுணர்வு அல்லவா?

வாழ்வின் திருப்புமுனையாக அமைந்துவிடும் பயண வழியில் துணைக்கரத்தின் அரவணைப்புக்காகத் தன்னை அர்ப்பணிக்கத் தயாராகித் தவங்கிடக்கும் தலைவாசல்...!

''மாப்பிள்ள வாராம்''

ஆமாம்; அதற்குமேலென்ன சந்தேகம்? பட்டாசு வெடியொலிகள் ஆர்ப்பரித்து அதனைமேலும் ஊர்ஜிதப் படுத்தியது.

சம்பிரதாய பூர்வமான வரவேற்புக்கள் மிகமரியாதை பூர்வமாக நிகழ்ந்தேறின. முன்வாசலில் 'காவின்' (திருமணப் பதிவு) வேலைகளுக்காக லெப்பை...மத்திச்சம் முதலானவர்கள் தயாராகவிருந்தார்கள்.

மணப்பெண் தயார்படுத்தி வைக்கப்பட்டிருந்த சாலையை நோக்கி, மாப்பிள்ளைவீட்டுப் பெண்கள் கூட்டாக வந்து அமர்த்தப்பட்டு, அவர்களுக்கான உபசரிப்புப் படலம் தொடர்ந்தது.

ஷரீஃபாவின் மனநிலை மிகப் பதட்டமாகவிருந்தது. தனக்குரியவர் யாரோ ... எவரோ எப்படிப்பட்டவரோ என்ற எண்ணம் தவிர்க்க முடியாது தொடர்ந்து சிக்கலாகிக் கொண்டிருந்தது. இன்னும் சொற்பவேளைக்குள் அவர் அழைத்துவரப்படாமலிருப்பாரா என்ன? கண்களை எப்படித்தான் மூடிக்கொண்டிருந்தாலும் 'சவடி' (தாலி)சூடும் நேரத்தில் கொஞ்சம் திறந்து பார்த்துவிடவேண்டுமென்ற அற்ப எண்ணம் அவளுக்கு!

அதற்கிடையில் இதென்ன அசாதாரணப் பரபரப்பு... 'காவின்' எழுதும் கைங்கர்யத்தில் ஈடுபடும் அமைதியான பொழுதில் இப்படியென்ன இடிக்குரல்கள்...?

''பொண்ண எறக்குங்கெ''

ஷரீஃபா திடுக்கிட்டாள். இதென்ன அதிசயம்...?'சவடி' கழுத்தில் ஏறுமுன்பு ......... பெண்ணை இறக்குவதா? எந்த நிலைமையையும் அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. அடுத்தவர்களிடம்விபரம்கேட்கக் கூடிய சந்தர்ப்பமாகவும் அதுஇல்லையே!

இரு பெண்கள் இருபக்கமாகவும் ஏறி மணப்பெண்ணை இருகைகளாலும் பிடித்திறக்கி மணவறைக்குள் அழைத்துச் சென்றார்கள்.

பெண்கள் குழாமுக்குள்ளும் குசுகுசுப்புத் தொடங்கிவிட்டது. எல்லாவற்றுக்கும் காதுகொடுத்து என்ன விஷயமென்பதைத் தொகுத் தெடுத்தாள். ஷரீஃபா...

அவளது நானா (அண்ணன்)வின் குரல்... உம்மா... வாப்பா .. இன்னும் இன்னும் ஒன்றுக்குள் ஒன்றாக விளங்காத எத்தனையோ குரல்கள்.....! அவளுக்கு எல்லாமே புரிந்துவிட்டது. இத்தனை ஆயத்தங்கள் அமர்க்களங்களுக்கும் பின் கல்யாணமே இல்லாமல் போய்விடக்கூடிய துர்ப்பாக்கியமான .. விஷப்பரீட்சையான கட்டம்; அதற்குமேல் அவளுக்குப் பொறுக்கமுடியவில்லை. எதையெதையோ பழைய பல நிகழ்ச்சிகளையும் அவள் நினைத்துப் பார்த்து ஒருமனதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டையில்:**

**இந்த சிறுகதையில் வரும் ஒரு காட்சியையே அட்டையில் படம் பிடித்துக் காட்டுகிறுர் ஓவியர் ஹறூன**

முடிவுக்கே வந்துவிட்டாள்.

''இங்க கலியாணம் எனக்குத்தானே...ஒங்க ஒருத்தருக்குமில்லயே! இதுக்கு நான் விருப்பம்...இன்றக்கி எனக்கு கலியாணம் நடக்காட்டி எனக்கு இனிமேல வாழ்க்கையே தேவயில்ல...''

ஓ...ஷரீஃபாதான் இப்படி இடிக்குரல் எழுப்பினுளா? யாராலும் நம்பவே முடியவில்லை; அதிக நேரம் செல்லவில்லை. கல்யாண ஏற்பாடுகளைச் செய்த குடும்ப முக்கியஸ்தர்களெல்லோரும் அங்கு குழுமிவிட்டார்கள். இப்படி இவள் கர்ச்சிப்பாளென்று யாருமே எதிர்பார்த்திருக்க முடியாதுதான்.

எத்தனையோபேர் எத்தனையோ விதமாக எத்தனையோ காரணங்களை முன்வைத்து, என்னதான் ஏற்பாடுகள் நிகழ்ந்துவிட்டபோதிலும் இக்கல்யாணம் நடைபெறக்கூடாதென முன்மொழிந்தார்கள்.

எவருடைய எந்த விளக்கத்தையும் ஷரீஃபா ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. இவள் இப்படி அடம்பிடித்து நிற்பாளென்று யாருமே எதிர்பார்க்கவுமில்லை.

என்னதான் செய்வது? அவள் இப்படியிருக்கும்போது ..பிடிவாதம் செய்யும்போது எல்லாம் விதிப்படியே என்ற சிந்தையில் எல்லோருமே ஒரு முடிவுக்குத் திரும்பவும் வந்துவிட்டார்கள்.

இரண்டு மூன்று மணி நேரத்துக்குள் கற்பனை செய்து பார்க்கமுடியாத எத்தனையோ குழறுபடிகள்...இடி...மின்னல்...மழை....மீண்டும் பழைய அமைதி!

திரும்பவும் ஷரீஃபா மேடையில் அமர்த்தப்பட்டாள். பழைய நிலைமை மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுபோல.

மாப்பிள்ளை அழைத்து வரப்பட்டார். 'சவடி' கட்டல் சிறப்பாக நடந்தேறியது. மணமகளுக்கு மனதில் நிரம்பிய மகிழ்ச்சியானபோதிலும், அவளது இனவழியினரின் முகத்தில் இருளே கவிந்திருந்தது. அதைத்தொடர்ந்து ஆசாரப்படி கிரியைகள் ஏனோதானோவென்று நிகழ்ந்தன.

* * * *

ஒரு கல்யாணம் நடைபெற்று முடிவதென்றுல் இலேசான விடயமா என்ன? ஷரீஃபாவின் கல்யாணப் படலமும் தொடங்கி எப்படியும் நாலைந்து மாதங்கள் நகர்ந்திருக்கும். மாப்பிள்ளை பார்த்தல்... பெண்பார்த்தல்......... பேச்சுவார்த்தைகள் இப்படியிப்படித் தெரியாதா இனி!

**நீர்ப்பாசனத் திணைக்களத் தமிழ்ப்பண்பாட்டுக் கழகம் அனைத்திலங்கை அடிப்படையில் நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றுவது பரிசுக்குரிய கதை.**

எதிர்பாராத விதமாக நடந்துவிட்ட விடயம் இதுதான். பேசி...பார்த்த மாப்பிள்ளையல்ல அன்று வருகை தந்திருந்தது. வேறு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மணப்பெண்ணின் சகோதரன்தான் இடைநடுவில் இதனை உன்னிப்பாக அவதானித்தான்.

அதோடு தொடர்ந்தது பிரச்சினை. மாப்பிள்ளைக்கு நடுநடுக்கம்........ பதட்டம்...எப்படியோ ஒருவருக்காக இன்னெருவரைக்காட்டி இடையில் விளையாடிய புரோக்கருக்கே வெற்றி!

எவ்வாறே உள்வீட்டிலிருந்து கிளம்பிய குரல் மணப்பெண்ணின் குரல்—நிலைமையை அமைதிப்படுத்தியது. இல்லாவிட்டால் அவமானங்கள்...பரபரப்புக்கள்... ..ஏன் அதற்கு மேலும் சென்றிருக்கக்கூடும்.

மாப்பிள்ளைக்கு நாற்பது வயதிருக்கும்; அவ்வளவுதான்! வேறெந்தக் குறைபாடும் இல்லை. இளமையில் ஏற்பட்ட நோய் காரணமாக திருமணத்தை விரும்பாதிருந்து காலம் கடந்து இப்படி நேர்ந்துவிட்டது. எப்படியும் பதினெட்டு வயதுக் குமரிக்கொழுந்து நாற்பது வயதை விரும்பாதென்பதே மற்றவர்களின் பொதுக்கருத்து. ஆனுல் இப்பொழுது அவர்கள் சட்டபூர்வமாகக் கணவன்-மனைவியாகிவிட்டார்களே!

* * * *

எங்கும் அமைதியின் ஆக்கிரமிப்பு.

புதுப் பெண்ணையும் மாப்பிள்ளையையும் முதல் தனிமைச் சந்திப்பாக ஒரே அறைக்குள் நுழைவித்து, ஐந்து நிமிடங்கள் கூட பூர்த்தியடைந்துவிடவில்லை.

மாப்பிள்ளைக்கு ஒருவித தாழ்வுச் சிக்கல் மனைவியின் முகத்தை நேராகப் பார்க்க ஒருவித கூச்சம்... எல்லோரும் சேர்ந்து எப்படியெப்படியோ, யார் யாரையோ ஏமாற்றிவிட்டார்களேயென்ற எண்ணம்...!

உள்ளரங்கப்படி மனைவி அவரைப் புறக்கணித்தால்... ஒரு மனைவியின் அந்தஸ்தில் அந்தரங்கத்தில் நடந்துகொள்ளாவிட்டால்... அவனது சிந்தனை எங்கெங்கோ சிதைந்தது. சிகரட்டுகள் அதன் வெளிப்பாடாகத்தான் புகைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ததோ?

ஆனால்... அந்தப் பெண்ணின் ஒரே பிடிவாதத்தால் தான் இன்று அவன் அந்த அறைக்குள் புதுமாப்பிள்ளையாய்ப் பிரவேசிக்க முடிந்ததென்பது அவனுக்கு இதுவரை தெரியாத தொன்றல்லவா? அவள் அப்படியானதொரு முடிவுக்குத் திடுதிப்பென வந்துவிடவில்லை, அதற்கும் ஒரு பின்னணி இல்லாமலில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்பு அவள் பதினாறு வயது இளங்குமரியாகப் பளிச்சிடும் காலம். அழகு மதாளிப்பு அவளோடு கொஞ்சிவிளையாடிக் கொண்டிருந்தது.

ஒருநாள் திடீரென்று வீட்டில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை! ஷரீஃபாவை அலங்காரப்படுத்தத் தொடங்கி விட்டார்கள். அவளுக்கு எதுவுமே விளங்கவில்லை. நேரம் போகப் போக அவளைப் பெண்பார்க்க வருவதற்காகத்தான் இத்தனை தயாரிப்புகளுமென்று அவளுக்கு விளங்கிவிட்டது. மண வாழ்வு பற்றிச் சிந்திக்க முன்பே அவர்களுக்கு ஏனிந்த அவசரமென்று அவளால் கேட்கவும் முடியவில்லை,

“உங்களயல்ல மகள்...... சாச்சி (தாயின் தங்கை) யத்தான்” மிகச் சிரமப்பட்டு உம்மா பிரஸ்தாபித்தாள்.

“அப்ப என்ன என்னத்துக்கு.........?” அவள் வினாத் தொடுத்தாள்.

“கொஞ்சம் நேரத்துக்கு பேசாம இருங்க புள்ள” எல்லோருமே ஒன்றாகவே அவளுக்குச் சொன்னார்கள்.

“எனக்கேல... எனக்கேலா உம்மா”

அவளது பின்வாங்கல் எடுபடவில்லை. கடைசியில் வீட்டாரின் நிர்ப்பந்தம் வெற்றி பெற்றது.

விடயம், சிறிய தாய்க்காக அவள் பெண்ணைக் காட்டப் பட்டாள். இல்லாவிடில் வந்தவர்கள் சம்மதிக்கப் போவதில்லையென்பது முன்னனுபவங்கள் அவர்களுக்குணர்த்தியுள்ள தீர்வு.

உண்மைதான் ஷரீஃபாவின் சாச்சி, கறுப்பு...மெலிந்த உருவம்...அதற்குமேல்சொல்ல என்ன இருக்கிறது!

கொழுத்த சீதனம்...ஆதனங்கள், மாப்பிள்ளை வீட்டார் அடுத்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள். வசதி வாய்ப்புக்கள் குறைந்தவர்கள். திருமண நாளன்று உண்மை அவர்களுக்கு வெளிப்பட்டபோதிலும் அதற்காக அவர்களால் எதுவுமே செய்துவிடமுடியவில்லை. மெல்லிய சலனத்தோடு காரியம் கரையேறிவிட்டது. பாவம் அந்த மனிதன்...அப்பாவி மாட்டிக் கொண்டார்.

காலம் எப்படித் திரும்பி நின்று விட்டது. ஏமாற்றியவர்கள் ஏமாற்றப்படுவார்கள் என்ற தத்துவம் மெய்ப்பிக்கப் பட்டுவிட்டதோ?

ஷரீஃபா... அன்று நிர்ப்பந்தத்தின் பேரில்தானே அப்படிக் காட்டினார்கள். அதனால்தானோ அவள்எதிர்பாராத வகையில் இப்படியொரு நிலை ஏற்பட்டபோது, அந்தவஞ்சத்தை எப்படியோ தீர்த்துக் கொண்டாள்.

கணவன் யாரோ?எவரோ? அவருக்கு ஏற்றாற்போல நடந்து கொண்டு, அன்பைப் பொழிந்தால், அதுதானே மகிழ்ச்சிகரமான மணவாழ்வு? அதற்கு ஷரீஃபா தன்னைத் தயார்படுத்திக்கொண்டாள்.

நினைவலைகளின் பின்னலோடு பெருமூச்சு விட்டவாறு எழுந்தாள் ஷரீஃபா. என்ன யோசனையோ தெரியாது அவளது கணவன் ஆழ்ந்து போயிருந்தார்.

மெதுவாக அவரது பக்கத்தில் போயமர்ந்தாள் அவள் அவனுக்கு பெரிதும் ஆச்சரியமாகவிருந்தது.

“என யோசிக்கிய? நீங்கதான் இனி எனக்கெல்லாம்” என்றவாறு வாரியணைத்துக் கொண்டாள்.

இத்தனை வயதும் கடந்துவிட்டபின்பு, இப்படியொரு இளமை...... இளமையோடு கலந்த அன்பு அன்பில் குழைந்த இனிமை கிடைக்குமென்று அவன் நிதானித்திருக்கவில்லை. இனியென்ன தயக்கம்? அவன் கைகளுக்குள் அவள் சிறைப் பட்டாள்.

அதற்குப்பின்புநிகழ்ந்தவை ...அவர்களின் அந்தரங்கமாயிற்றே !

(யாவும் கற்பனை)

## தேசாபிமானி!

முன்பொருமுறை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பிரதமர் லாய்ட் ஜார்ஜ் எல்லாக் காலனி நாடுகளுக்கும் சுதந்திரம் வழங்க வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தார். அவரது கொள்கைக்கு எதிரான ஒருவர் எழுந்து “நரகலோகத்திற்கும் சுதந்திரம் வழங்கப்படுமா?” என்று கோபமாகக் கேட்டார். உடனே பிரதமர் ஜார்ஜ் அமைதியாக “இப்படித்தான் ஒவ்வொருவரும தான் வாழும் உலகத்திற்காக (நாட்டிற்காக) வாதாட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்” என்று பதிலளித்தார்!

தகவல்! எஸ். ஐ. ஜெகதீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய பிரச்சினைகள்

— ரெம்மா —

பாராளுமன்ற ராஜதந்திர முயற்சிகளால் தமிழ் ஈழத்தைக் கனிய வைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் தமிழர் கூட்டணி அரசியல் செயற்படுகின்றது. அண்மையில் பெரும் சலசலப்பை ஏற்படுத்திய மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டம் இந்த ராஜதந்திர முயற்சிகளின் வெற்றியா? அல்லவா? என்பதைப்பற்றி இருவேறுபட்ட அபிப்பிராயங்கள் உண்டு.

கடந்த அரசாங்கத்தில் பங்கு கொண்டிருந்த தமிழ் இடதுசாரிகளிற் சிலர் தேசிய வாதம் என்ற கோஷத்தின் சுருதி ஏடுபடாத நிலையில் ''சுயநிர்ணய உரிமை'' என்ற தீர்வை முன்வைத்து எழுதியும் பேசியும் வருகின்றனர். பலர் தங்களது நிலைப்பாட்டைத் தெளிவு படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

தீவிர போராட்ட வாதிகளான இளைஞர்களும் வெளிநாட்டு இயக்கவாதிகளும் நடத்தும் போராட்டம் மூலமோ அன்றேல் பாராளுமன்ற ராஜதந்திர முயற்சிகளின் மூலமோ என்றோ ஒருநாள் தமிழ் ஈழம் மலரும் என்ற நம்பிக்கையில் ஈழத்தின் தமிழ்ப் 'பொதுஜனம்' வழமைபோல தனது அன்றாட உணவிலும் பொழுதுபோக்குகளிலும் அயல் நாடு சென்று பொருளீட்டுவதிலும் ஈடுபட்டுள்ளது.

சுருங்கக் கூறினால் இதுதான் கடந்த மூன்று ஆண்டுகளின் தமிழர் நிலை. ஐக்கிய தேசியக்கட்சியின் ஆசை வார்த்தைகளில் மயங்கிச் சுயலாபம் தேடும் தமிழ் அரசியல்வாதிகளைப் பற்றியோ அல்லது தாம் பேசும் அரசியல் சித்தாந்தங்களுக்குப் புறம்பாக இரகசியமாக ஆட்சியாளரிடம் தொடர்பு கொண்டு தத்தம் குடும்ப நலன்களைக் கவனித்துக் கொள்ளும் உயர்மட்டக்குடியினரைப் பற்றியோ நான் இங்கு தனியாக வகைப்படுத்திக் கூறவில்லை. ஏனெனில் அவர்கள் மேற் கூறிய 'ஸ்ரீ மான் பொதுஜனம்' என்ற வகைக்குள்ளேயே அடங்கியுள்ளனர். தமிழீழத்துக்கு இவர்கள் எதிரிகளல்ல என்பது மட்டுமன்றி தமிழீழம் கிடைத்த பின்னர் அதன் ஆட்சி நலன்களைத் தங்களுக்குப் பயன் படுத்திக் கொள்ள முன் நிற்கப் போகிறவர்களுங் கூட. இத்தகைய சமூக அரசியற் பகைப்புலத்தில் தமிழ் இலக்கியவாதிகள் எங்கு நிற்கின்றனர்? என்ன செய்கின்றனர்?

சமூக நலனில் அக்கறை கொண்ட பொதுவுடைமைக் கோட்பாட்டினர் ஒரு சிலர் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 'மார்க்ஸியம்' என்ன வழிமுறைகளைப் போதித்திருக்கின்றதென்பதனையும் சர்வதேச ரீதியில் இப்பிரச்சினைகள் எப்படித் தீர்க்கப்பட்டுள்ளன என்பதையும் சற்று வெளிப்படுத்தி வருகின்றனர் ஏ. ஜே. கனகரட்ணா அவர்களின் சில கட்டுரைகளை இவ்வகையிற் குறிப்பிடலாம்.

படைப்பாளிகள் என்ற வகையில் தனித்துவமான கருத்தோட்டத்தை இன்னும் எவரும் வெளிப்படுத்தியதாக தெரியவில்லை. 1977 ஆம் ஆண்டு இனக்கொலைச் சூழ்நிலையினை அடுத்து வெளிவந்த கவிதை சிறுகதைகளில் சில வற்றில் பேரினவாதக் கொடுமை பொருளாக அமைந்துள்ளது உண்மையே. அதற்கு முன் 1975 ஆம் ஆண்டிலிருந்து சுடர்—சஞ்சிகையில் தமிழர் பிரச்சினைகளைப் பொருளாகக்கொண்டு கவிதைகள், சிறுகதைகள் வெளிவந்துள்ளன என்பதையும் இங்கு குறிப்பிடுவது முக்கியம்.

இவ்வாறு எழுதப்பட்ட கவிதைகளும், கதைகளும் பெரும் தேசிய வாதத்தின் பல்வேறு கொடுமையினையும் சித்திரித்துள்ளன தலைநகர சூழ்நிலையிலிருந்து கிராமப்புறம்வரை தமிழன் பண்பாட்டு ரீதியாகவும் பிரதேசரீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவும் எவ்வாறு ஒடுக்கப்படுகிறான் என்பதை இவை புலப்படுத்தியுள்ளன. ஆயினும் அவ்வப்போதைய உணர்ச்சிகளின் வெளிப்பாடாக இவை காணப்படுகின்றனவேயன்றி ஆழமான சமூகப்பார்வையுடனும் தெளிவான தீர்வுடனும் அமைந்துள்ளன வென்று கொள்வதற்கில்லை.

நாவல் என்ற வகையில் இரண்டு முக்கிய படைப்புக்களை இங்கு குறிப்பிட வேண்டும். ஒன்று அருளர் எழுதிய 'லங்காராணி' (1978) இன்னொன்று தி. ஞானசேகரனின் குருதிமலை (1979)

இனக்கொலைச் சூழ்நிலையில் கொழும்பிலிருந்து கப்பலில் காங்கேசன்துறைக்கு வந்த ஒரு அகதிக்கூட்டத்தின் கதையான லங்காராணி ஒரு நாவல் என்ற வகையில் நிறைவுடையதாக அமையாவிட்டாலும் சமகால—அரசியல் சமூக விமர்சனமாகவும் தீவிர போராட்ட உணர்வுக்கான முனைப்பை புலப்படுத்துவதாகவும் தமிழீழம் தவிர்க்க முடியாத முடிவு என்பதை வலியுறுத்துவதாகவும் அமைந்தது. தமிழகத்தில் வெளியிடப்பட்ட இந்த நாவல் ஈழத்தில் தடைசெய்யப்பட்டது.

மலையகத்தின் தோட்டத்தொழிலாளர்களது வாழ்க்கை நிலை அரசின் திட்டங்களாலும் சூழவுள்ள சிங்கள கிராமமக்களது ஆக்கிரமிப்பு உணர்வினாலும் பாதிக்கப்பட்டு வருவது நீண்ட வரலாறு. இந்த வரலாற்றின் ஒரு கட்டத்தை- தோட்டங்களை தேசியமயமாக்கம் என்ற திட்டத்தின் கீழ் ஒரு தோட்டப்பகுதியின் தொழிலாளர் அடைந்த இன்னல்களையும் அந்த இன்னல்களை எதிர்த்து. அவர்கள் வீரமாகப் போராடி அரசைப்பணியவைத்ததையும்—சித்திரித்ததுகுருதிமலைநாவல் ஆசிரியர் வெளிப்படையாக அரசியல் பேசவில்லை.

ஆனால், உண்மைநிலையைச் சித்திரித்தபோது அதற்கூடாக அங்கு உருவாகிவரும் பெருந் தேசியவாத எதிர்ப்பு தெளிவாகப் புலப்படுகின்றது.

ஈழத்தின் தமிழர் பிரச்சினைகளுக்கும் இலக்கியத்துக்கு மிடையிலான தொடர்பு பற்றிய பல அம்சங்களையும் கடந்த முப்பதாண்டுகால அரசியல் இலக்கிய வரலாற்றுப் பகைப்புலத்தில் தொடர்புபடுத்தி நோக்கினோம். இன்றைய சூழல்தொடர்பாக ஒரு முக்கிய அம்சத்தைக் குறிப்பிடுவதுடன் இக்கட்டுரைத் தொடரை நிறைவு செய்யலாம் என நினைக்கிறேன்.

தமிழ் ஈழமோ அன்றேல் சிலர் கூறுவது போல ஈழமோ தவிர்க்கமுடியாதது. அதற்கான போராட்டத்திற்கு மக்களைத் தயாராக்கும் வகையில் சமதர்ம சமூகப்பார்வை உணர்ந்ததை உறுதியுடன் வெளிப்படுத்தும் தன்னம்பிக்கையும் பெருந்தேசிய வாதத்துக்கெதிரான கருத்துக்களை அஞ்சாது வெளிப்படுத்தும் ஆண்மையும் சந்தர்ப்பவாதிகளை இனங்கண்டு விமர்சனம் செய்யும் துணிவும் இன்றைய தமிழ் எழுத்தாளனுக்குத் தேவை.

பத்திரிகையில் அல்லது சஞ்சிகையில் கதையோ அல்லது கவிதையோ பிரசுரமாவதன்மூலம் எழுத்துத்துறையில் ஒரு இடத்தை நிரந்தரப்படுத்திக் கொள்வதோடு எழுத்தாளனின் பணி முடிவடைந்து விடுவதில்லை. பத்திரிகையின் இலக்கிய நிலைப்பாட்டுக்கு வளைந்து கொடுத்து வகைமாதிரியான படைப்புகளைத் தருவதும் பயனளிக்கப்போவதில்லை. உண்மையான தமிழர் பிரச்சினைகளைத் துணிவுடன் எழுதவும் விமர்சிக்கவும் முன் வருக! எனது தமிழர் சமுதாயம் இன்றைய ஈழத்து தமிழ் எழுத்தாளனுக்கு அழைப்பு விடுக்கிறது. இந்த அழைப்புக்குப் பதிலளிப்பது ஈழத்து தமிழ் எழுத்தாளனின் இன்றைய கடமையாகும்.

— முற்றும்—

## பயிர்!

மழைப்பெற்றோரின்
தவப் புதல்வியாம்
நீர் மகளைக் காதலித்து,
அவளுடன் நிலம்
கொண்ட
நல்லுறவினால்
அத்தம்பதியருக்கு
இறைவன் அளித்த
அரும் பெரும்
மழலைச் செல்வமே
பயிர்.

**எஸ். புஸ்பராணி அந்தரேஸ் முதலியார்**
பரந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் வாசகர் வட்டம்

## அங்கத்தினர்கள்

சுடரின் பணியை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் நாம் அமைத்திருக்கும் வாசகர் வட்டத்தில் உறுப்பினர்களாகசேர விரும்புவோர் ஒருவருட சந்தா தொகை (ரூ. 25-00)யுடன் தங்களை பதிவு செய்து கொள்ளலாம். ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு இலக்கம் தரப்படும்.

சந்தாத் தொகை அனுப்புவோர் தமது காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையில் 'நிர்வாகி' சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்' என குறிப்பிடுதல் அவசியமாகும்.

-ஆசிரியர்

---

132. கீ. அழகுராசா
மக்கள் வங்கி
பொத்துவில்

133. க. சதானந்தம்
பெரிய கல்லாறு-2
கல்லாறு

134. க. தம்பியப்பா
துறை நீலாவணை-8
கல்முனை

135. வ. க. ரவீந்திரன்
சுவீற்றேசஸ்
கல்லாறு

136. எல். பி. ஞானப்பிரகாசம்
இந்துக்கல்லூரி
திருக்கோணமலை.

137. செல்வி இ. விஜயகுமாரி
ஸ்ரீ சண்முகநாத வித்தியாலயம்
திருகோணமலை.

138. ஏ. எஸ். கிருபைராஜ்
இந்துக்கல்லூரி
திருகோணமலை.

139. ஜி. எப். லூயிஸ்
இந்துக்கல்லூரி
திருகோணமலை.

140. டாக்டர் சி. அருள்ராமலிங்கம்
பிரோபா கிளினிக்
திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.

141. செல்வி கங்கை செல்லையா
சரசாலை வடக்கு
சாவகச்சேரி.

142. திருமதி இந்திரா சுந்தரலிங்கம்
சரசாலை வடக்கு
சாவகச்சேரி.

143. செல்வி மைதிலி சோமஸ்கந்த சர்மா
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

144. க. நவரத்தினம்
சரசாலை வடக்கு
சாவகச்சேரி.

145. கலைச்செல்வி. அ.
மண்டைதீவு—8.

146. கனக. பிரதீபன்
மே/பா தயாபரி
கொக்குவில் மேற்கு

147. இ. கௌரிநாதன்
985, அன்புவழிபுரம்
திருகோணமலை.

148. எஸ். சர்வானந்தா
103/4 கந்தசுவாமி கோவில் வீதி
திருகோணமலை.

149. மு. பாலசுப்பிரமணியம்
கும்பாவெளி
மந்துவில்.

150. சு. செல்வரத்தினம்
60, மெயின் வீதி
பன்வில.

151. ஜனாப் எம். ஐ. லுக்மான்
33, அராலி வீதி
யாழ்ப்பாணம்

152. செல்வி வை. பரிமளாதேவி
உபதபால் அலுவலகம்
நெடுந்தீவு மேற்கு

153. டாக்டர் தம்பிஐயா
'கதிருஒளி'
தையிட்டி
காங்கேசன்துறை

154. ஏ. எஸ். புஷ்பராணி
H 156, குமரபுரம்
பரந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனென் செய்தான் பாவமென்னவோ?

வரணியூர் சி. கந்தசாமி

அதிகாலை நேரமது அவனியெங்கும் மையிருட்டில்
எதிரான கொடும் பனியை எரிப்பதற்கு அஞ்சியங்கே
உதியாமற் சூரியனும் உறங்குகிறான் கீழ்த்திசையில்
விதியோ உன் விளையாட்டோ விழிப்பவன் செய் பாவமென்ன?

கொட்டும் மழையாலும் கொடுங்குளிரின் வலியாலும்
கட்டி பட்டோ இப்புவியும் கல்லாய் உறைந்ததுவோ?
சட்டை விட்ட மாந்தர் சாய்ந்து மடிவதற்கு
செட்டை விட்ட ஈசலிவர் செய்து விட்ட பாவமென்ன?

காலை தொட்டு மாலைவரை கல்லுடைக்கும் மாந்தரிவர்
வேலை செய்யும் போதினிலே வெந்துவிட்ட செந்நீர்தான்
ஆழ்கடலில் போய்க் கலக்கும் ஆறுகளாம், ஆனாலும்
ஏழ்மையில் நீ மாய்வதற்கு செய்துவிட்ட பாவமென்ன—?

அவைதனில் அனைவர்க்கும் அருந்துகின்ற பானமதாய்
அவன் பறித்த தேயிலையோ அரண்மனையில் கோலோச்சும்
அருந்தி விட்டே தேனீரை, அவரெறிவார் சக்கையினை
அந்தநிலை அவன் நிலையாம் அவன் செய்த பாவமென்ன—?

பள்ளிப் படிப்பிவர்க்கு பட்டப் பகற் கனவு
துள்ளித் திரியுமிவர் தூங்குவதோ மண்மேடு
ஒட்டி வளைந்த உடல் ஒல்லியாய் மெலிந்திருக்கும்
பாலப் பருவமிவர் பண்ணிவிட்ட பாவமென்ன—?

வாக்கு உரிமையில்லை வழிதவறி வந்தவராம்
கேட்கும் மனிதர் சிலர், கேட்டாலோ கேடுண்டாம்
ஊக்கும் கருவியிவர் ஊன்றுகோல் நாட்டினுயிர்
காக்கும் செம்மல்காள் செய்துவிட்ட பாவமென்ன—?

நாட்டின் பொருள் வளமோ நண்பா உன் தோள்களிலே
வீட்டில் நீ படுந்துயரம் விதந்துரைக்க வாயில்லா—
ஏட்டால் பயனில்லை — இருந்தாலும் நானதனை
பாட்டில் வைத்து பாடுதற்கு பாரில் செய்த பாவமென்ன—?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலையும் நிலையும்

ஜெ. கிருபாலக்ஷ்மி

## 6ம் பரிசு பெற்ற மணிக்கதை

**அ**லங்கார விளக்குகள் ஒளியுமிழ்ந்து கொண்டிருந்தன.

தலைநகரின் கலகலப்புகள் சாலை நெருங்கிய வேளை; பகல் முழுவதும் எப்படி எப்படியோ உழைத்துக் களைத்த மனித ஜீவன்கள் கூடுகளுள் குமைந்து கொண்டிருக்கும். மாடியின் மனிதர்கள் குளிர் அறைகளில் குதூகலத்தில்...... இரவைப் பகலாக்கும் ஹோட்டல்களில் வெறியாட்டம். தலைநகர் தனது தனித்துவத்துடன்...... ..

நாட்டின் அழகை உயர்த்திக் காட்ட முனைந்தவர்கள் பெருகும் சேரிகள் அப்படியே இருக்க சுற்றிவர கட்டிடங்கள் எழுப்பினர். சந்திகளில் அலங்கார பீடங்கள், விதம் விதமான சோடனைகள். விளக்கு அலங்காரங்கள்.

வளர்ந்து வரும் 'ஏழை நாடு' என்பவர்களே செய்யும் வேடிக்கை.

'லேக்கவுஸ்' சந்தியடியில் ஒளி வெள்ளத்தில் மிதக்கும் அலங்கார பீடம்... அதன் ஓரமாக கீழே இறங்கினால் இருளில் மனிதப்புழுக்கள் இல்லிடம் கூட இல்லாமல்... ஓ ...இருள் தானே மறைத்துவிடும் என்ற எண்ணம் போலும்.

''சர்...'' என்று வந்து வளைவில் திரும்பும் ஒரு உயர்ந்த ரகக் கார்.

'பொது பொது' வெனத் துள்ளி இறங்கும் வெளி நாட்டவர்கள் மூவர். முன்னால் வழி காட்டிய படி நம்மவர்—'கைடு'

இருக்கும் ஒளியை வெல்லும் 'பளிச் பளிச்' படமெடுக்கிறார்கள். ''பியூட்டி... பியூட்டி'' அவர்களிடம் ஓயாத முணுமுணுப்பு. பீடத்தின் நடுவிலே ஒளிக்கற்கள் பதித்த அற்புதமான கலைப்படைப்பு, சுற்றிவர மரஞ் செடிகள், கொடிகள், தண்ணீர் ஊற்று...

ஒரு வெளி நாட்டவன் கூர்ந்து பார்த்து...''ஊ'' என்று கை நீட்டுகிறான். ஓர் ஏழையின் சிலை. தத்ரூபமாக...

கந்தை உடை, சோகம் ததும்பும் முகம்... கலைந்த தலை, எவ்வளவு யதார்த்தமாக சிலையை வடித்திருக்கிறார்கள். அற்புதம் .. ..அபாரம், ஏழ்மையும் கலைஞன்கை பட்டு ......காட்சிக்கு உகந்ததானது.

கைடு விளக்குகிறார்.

'' இந்த அரசாங்கம் ஏழைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களது மலர்ச்சிக்காகவே பாடுபடுகிறது......அதனை எடுத்துக் காட்டத்தான் இந்தச் சிலையையும் இங்கே வைத்திருக்கிறார்கள்.

''பளிச் பளிச்'' மாறி மாறிப் படமெடுத்தார்கள்.

அவர்களுக்குள் ஆசை........ இவ்வளவு யதார்த்தமான சிலையை அண்மையில் சென்று பார்க்க வேண்டும்.

போனார்கள், ஆட்கள் அருகில் சுற்றி வளைப்பதை உணர்ந்ததும் ''பசி...பசி...என்று முணுமுணுத்தபடியே சரிந்து விழுந்தான் மயக்கத்துடன் அமர்ந்திருந்த அந்தப் பிச்சைக்காரக் கிழவன்.

இப்போது இவர்கள் சிலையானார்கள்.

**(யாவும் கற்பனை)**

---

மணிக்கதைப் போட்டியில். முதலாவது பரிசையும், மூன்றாவது பரிசையும் ஒருவரே பெற்றுள்ளதால் மூன்றாவது பரிசுக்குரிய சன்மானத் தொகையான ரூ. 10/- 'சிலையும் நிலையும் என்ற மணிக்கதையை எழுதிய ஜே. கிருபாலக்ஷ்மி அவர்களுக்கும், நான்காவது பரிசுக்குரிய 'அழியா ஓவியம்' மணிக்கதையை எழுதிய செல்வி சாரதா சண்முகநாதன், பரிசுத் தொகை தமக்கு வேண்டாம் என அறிவித்துள்ளதால், அதனை ஏழாவது இடத்தினைப் பெறும் 'சொல்லும் செயலும்' மணிக்கதையை எழுதிய திரு. வேலாயுதம் அவர்களுக்கும் வழங்குகிறோம்.

**— ஆசிரியர்**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றங்களும்

சினீ. ஆல. இராசேந்திரம்

எண்ணெய் குறைவாக இருந்த காரணத்தால் மங்கி எரிந்துகொண்டிருந்த குப்பி விளக்கின் வெளிச்சம் அந்தக் குடிசைக்குப் போதியதாக இருக்கவில்லை. குடிசை வெட்ட வெளியில் அமைந்திருந்த காரணத்தால் பலமாக வீசிய சோளகக் காற்று வாயினூடாக உட்புகுந்து விளக்கோடு போராடிக்கொண்டிருந்தது.

பாயை எடுத்து விரித்து பிள்ளைகளைக் கிடத்திக் கொண்டு தானும் அவர்களுடன் சரிந்து கொண்டாள் நாகம்மா.

உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த அந்தக் குப்பி விளக்கும் தன்பணி முடிந்தது என்று கருதிப்போலும் அணைந்து கொண்டது.

''அம்மா... பசிக்குது'' படுக்கையிற் கிடந்த நாகம்மாவின் குழந்தைகளில் ஒன்று, அவளைப் பார்த்துக் குரல் கொடுத்தது.

அதைத்தொடர்ந்து அவளுடைய மற்றைய செல்வங்களும் ''அம்மா... பசிக்குது; அம்மா பசிக்குது'' அதே பல்லவியைச் சோகம் ததும்பும் குரலில் பாட ஆரம்பித்தன.

காலை நண்பகல் இரண்டு வேளைக்கும் பொதுவாக கூப்பன் மாப்பிட்டு அவித்து இருந்ததைப் பங்கிட்டு சிறிது சிறிதே அவர்களுக்குக் கொடுத்திருந்தாள் நாகம்மா. அது அவர்களுடைய வயிற்றுள் போன அந்தக் கணமே எரிந்து போயிருக்கும் என்பது அவளுக்குத்தெரியும். பிள்ளைகளின் பசியின் நிலையைப் புரிந்து தான் பாயை எடுத்து விரித்து அவர்களைக் கிடத்திக் கொண்டு தானும் சரிந்தாள் நாகம்மா. அத்தருணம் அதைவிட வேறு என்னதான் செய்ய முடியும் அவளால்?

''அம்மா.. பசிக்குது'' மீண்டும் முதலாவது குரல் ஒலித்தது.

''சீனி இல்ல; தேயில கிடக்குது வெறும் தேத்தண்ணி வைச்சுத்தாரன் குடிக்கிறீங்களா?''

''ம்...சீனியில்ல என்டா எங்களுக்கு வேணும்''

''அப்பிடியெண்டா...... கொஞ்சம் பொறுங்க; அப்பா காசு ஏதேனும் கொண்டு வந்தா பாண் வாங்கிச் சாப்பிடுவம்''

''சாப்பாடு தர ஏலாது எங்களைப் பெத்திடுவினம்''

கடைக்குட்டிப் பையனின் அந்தப் புறுபுறுப்பு நாகம்மாவின் நாடி நரம்புகளை ஒரு கண நேரம் விறைக்கச் செய்தது.

சிறிது நேர இன்பத்திற்காக எதிர்காலத்தை எள்ளளவும் எண்ணிப் பாராது தாங்கள் இதுவரையும் கொண்ட உறவுகள் அனைத்தும் அவளுக்கு அசிங்கமானவையாகவே தெரிந்தன.

அன்னையின் வாயிலிருந்து அன்பே உருவாக வெளிவந்த அந்தப் பாண் என்ற தாலாட்டில் மயங்கியவர்கள் போன்று அடங்கிக் கொண்ட அவர்கள் சில நிமிடங்களில் கண்ணயர்ந்து கொண்டார்கள்.

நாகம்மா மாத்திரம் வயிற்றுப் பசியின் தாக்கத்தினாலும் மனச்சிந்தனையினாலும் நித்திரையின்றி உழன்று கொண்டிருந்தாள்.

''இன்னும் எத்தனை நாளைக்கு இந்த நிலைமை?''

''என் செல்வங்கள் வளரட்டுமன்; எங்களைப் பிடிச்ச மூதேவி இருந்த இடம் தெரியாமல் போகிறளா இல்லையா எண்டு பாப்பம்''

வழமை போன்று, அவள் நெஞ்சத்தில் எழும்பும் கேள்விக்கு பிள்ளைகளிடம் அவளின் எதிர்பார்ப்புக்களே பதில்களாகவும் அமைந்தன.

அப்போதுதான் ''நாகம்மா ...நாகம்மா...'' என்று ஒரு குரல் பெரிதாக அவளை அழைத்தது.

உடனேயே குரலிலிருந்து அது கடைக்கார மணியத்தார் தான் என்பதைப் புரிந்து கொண்டாள் நாகம்மா.

யாது செய்வதென்று புரியவில்லை அவளுக்கு.

கூப்பிட்ட குரலுக்கு மறு குரலின்றி எதுவித சலனமும் செய்யாது அப்படியே கிடந்து கொண்டாள் அவள்

தற்செயலாக வீட்டுக்கு வந்தாலும் நித்திரையிலிருந்து எழும்புவது போற் பாவனை காட்டி சமாளித்துக் கொள்ளலாம் என்பது அவள் எண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாகம்மா..." — மீண்டும் கூப்பிட்டுப் பார்த்துவிட்டு பதிலில்லாத காரணத்தால் திரும்பிவிட்டார் மணியத்தார்.

மணியத்தார் நாகம்மாவைத் தேடி வந்து திரும்பிப் போனது அத்தோடு மூன்றுவது தடவை.

ஆபத்துக்குதவும் மணியத்தாரைத் தான் ஏமாற்றுவதை நினைக்க நினைக்க நாகம்மாவின் நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது.

"சீ... நல்லவன் வீட்டு நாயும் வாழாது நம்ம வாழ்க்கை"— தன் வாழ்வைத் தானே நொந்து கொண்டாள் அவள்

முதற் தடவையாக முதல் நாட் காலை வந்தார் மணியத்தார். அவர் வருவதைத் தூரத்திலேயே கண்டு கொண்டாள் நாகம்மா.

"மணியத்தார் அம்மா எங்க எண்டு கேட்டா... எங்கேயோ போயிட்டா எண்டு சொல்லுங்க" —பிள்ளைகளிடம் சொல்லி விட்டு குடிசைக்குட் புகுந்து வாயிற் தட்டியை இறுகக்கட்டிக்கொண்டு இருந்து விட்டாள் அவள்.

வீதியில் நின்றவாறே விசாரித்த மணியத்தாருக்கு தாய் சொல்லிக் கொடுத்தது போலவே பதிலளித்தனர் பிள்ளைகள்.

"அம்மா வந்ததும் மணியத்தார் கடைக் கடன் ஐம்பது ரூபாவையும் கேட்டுப் போறதாகச் சொல்லுங்க"— கூறிவிட்டுத் திரும்பி விட்டார் மணியத்தார்

அவர் திரும்பிச்செல்லும் வரை நாகம்மா பட்டபாடு?

பிள்ளைகள் உண்மையைக் கூறி தன் மானத்தை வாங்கி விடுகிறூர்களோ என்று நினைக்குந்தோறும் அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டே இருந்தது.

அவர் திரும்பிவிட்டார் என்பது புரிந்ததும் "அப்பாடி" என்று ஒரு பெருமூச்செறிந்து ஓய்ந்தாள் நாகம்மா.

அதன் பின் இன்று காலை வந்தார் மணியத்தார்.

அவர் வருவார் என்பது தெரிந்து நேரத்தோடு வெளிக் கிளம்பி விட்டாள் நாகம்மா.

"அம்மா... உங்களுக்குத் தர யாரிட்டமோ காசு வாங்கப் போயிட்டா" — தாய் சொல்லிச் சென்றது போலவே ஒப்புவித்தனர் பிள்ளைகள்.

மணியத்தார் அதிகமாக எவருக்குமே கடன் கொடுக்க மாட்டார். நம்பிக்கைக்குரிய சிலருக்கு மாத்திரம் கடன் கொடுத்து வாங்குவதுண்டு அவருடைய நம்பிக்கைப் பட்டியலில் சிறப்பிடம் பிடித்துக் கொண்டவள் தான் நாகம்மா.

இருபத்தைந்து ஐம்பது ரூபாவுக்குள் கடன் வாங்கி

**இம்மாத பரிசுக் கதை**

ஒழுங்காகக் கொடுத்து தன்னுடைய நேர்மையை நிலை நிறுத்தி வந்தாள் அவள். அதனுற்றுன் நாகம்மா கேட்கும் போதெல்லாம் இல்லையென்னுது உதவி வந்தார் மணியத்தார்

நாகம்மாவின் கணவன் கணபதி என்றுல் ஒரு சதம் கூட கடன் கொடுக்கமாட்டார் அவர்

அவன் குடிகாரன் என்பதால் மட்டுமல்ல, கொடுத்த கடனைக் கேட்டாலே போதும் அதைவிடக் கூடிய செலவு ஏற்படத்தக்க சோலிகளை ஏற்படுத்தி விடுவான் என்பது அவருக்குத் தெரியும். அத்தோடு குடும்பத் தலைவனுக இருந்த போதும் நாகம்மாவுக்குள்ள பொறுப்புணர்ச்சி அவனிடம் இல்லை என்பது அவர் அறிந்த வொன்று

கடன் உதவக் கூடியவர்கள் எல்லோரிடமும் ஐந்து பத்து, இருபத்தைந்து என்று கைமாற்ருக வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்காததினுல் யாரிடமும் போய்க் கடன் கேட்க முடியாத நிலை நாகம்மாவுக்கு. அதனுல் தன்னுடைய நெஞ்சமே நாணத்தக்கவாறு தான் மணியத்தாரை ஏமாற்றிவிட்ட செயல்களை தன் நெஞ்சமெனும் களத்திலிட்டு இரைமீட்டுக் கொண்டிருந்தாள் நாகம்மா.

இரவு ஒரு ஏழரை மணியிருக்கும் கணபதி வாயிற் தட்டியைக் கைகளினுற் தட்டும்போதுதான் இவ்வுலக சஞ்சாரத்திற்குவந்தாள்நாகம்மா.

அன்று கணபதி குடித்திருந்ததாக தெரியவில்லை. ஒரு போத்தல் கள்ளோடு திரும்பியிருந்தான் அவன். கூலிவேலை செய்து பெற்றபத்து ரூபாவில் இரண்டு ரூபா போக மிகுதி எட்டு ரூபாவையும் வேட்டித் தலைப்பில் முடிந்து வைத்திருந்தான்.

உழைக்கும் முழுப்பணத்துக்கும் குடித்துவிட்டு, 'உணவும் வேண்டாம், உடையும் வேண்டாம்; குடும்பமும் வேண்டாம்' என்பது போற் கிடந்து விடும் கணபதியின் அன்றைய செய்கை புதிரானதாகவே இருந்தது.

"உழைக்கப் போகிறு; கிடைக்கிறதைப் போடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு ஏதேனும் வாங்கிச் சமைச்சுக் குடுக்கக் கொண்டு வந்திடு. இல்லையெண்டா ஒரே போக்கா—இங்கு வராமலே போயிடு. நீ அழிஞ்சு போனாலும் எனக்குப் பறவாயில்லை''

—இப்படி எத்தனையோ நாள் நாகம்மா கணபதியைத் திட்டி அனுப்பியிருக்கிறாள். இதுவரையும் அவன் அதைப் பொருட்படுத்தியதில்லை. இன்றுதான் ஓரளவு உணர்ந்திருக்கிறான் போலும்.

''பொடியளுக்கு என்ன கொடுத்தா...?'' கணபதி மனைவியைக் கேட்டான் முடிச்சில் எட்டு ரூபா காசை அவிழ்த்தவாறே.

''என்ன வைச்சிட்டுப் போனனி இஞ்ச காய்ச்சிக் குடுக்கிறதுக்கு?''-கணவன் மீது எரிந்து விழுந்தாள் நாகம்மா.

''சரி அதைவிடு; சுணங்காமல் மணியத்தார் கடைக்குப் போய் ஏதேனும் வாங்கி வந்து பொடியளுக்கு காய்ச்சிக் குடு''... அந்த எட்டுரூபாவையும் அவளிடம் நீட்டினான் கணபதி.

'எந்தமுகத்தோடு மணியத்தாரிடம் போவது?'— சிந்தித்தாள் நாகம்மா,

அவர் முகத்திற் தட்டுப்படாமல் தான் ஒளித்துத் திரிவதை விளங்கியிருப்பாரென்றால்...?தொடர்ந்து நினைத்துப் பார்க்கவே அவள் மனம் கூசியது.

அன்று ஒரு இரண்டு ரூபாவுக்காக மணியத்தார் செல்லம்மாவை ஏசிய விதம்! அந்த அளவு அபத்தமான வார்த்தைகளை உபயோகிப்பவர் அவர்.

''நான் போக இல்ல. நீங்க போய் வாங்கி வாருங்க'' கணவனிடம் கூறினாள் நாகம்மா.

கணபதி எப்படிப் போவான் மணியத்தார் கடைக்கு? தன் படியேறக்கூட மணியத்தாரும் அவனை விடமாட்டாரே.

நேரமும் எட்டு எட்டரை ஆகிவிட்டது. மணியத்தார் கடைபூட்டும் நேரம் அது.

இறுதியில் நாகம்மாவே அங்கு புறப்பட்டாள்.

பலகைகளைப் போட்டுக் கடையைப் பூட்டுவதில் ஈடுபட்டிருந்தார் மணியத்தார்.

''என்ன நாகம்மா இரண்டு மூன்று தடவை வீட்டுக்கு வந்தன் ஆளைச் சந்திக்க முடியேல்ல. அந்தக் காசைத் தரப்படாதா?''

''நீங்கவந்து போனதெண்டு பொடியள் சொன்னது மணியண்ணை. நானும் ஓடி ஆடி எங்கேனும் மாறிடலாம் எண்டு பாத்தன். ஒரு இடமும் சந்திக்க இல்ல. எப்பிடியும் நாளைக்குத் தந்திடுறன்.''

''சரி, இப்ப என்ன வேணும்''

காசை நீட்டியவாறே ''ஒரு கொத்து அரிசியும் ஏதேனும் கறிச்சாமானும் கிடந்தாப் பாத்துந் தாருங்க அண்ணை'' என்றாள் நாகம்மா.

அரிசியையும் ஒரு இருத்தல் கத்தரிக்காயையும் மேசை மீது வைத்தார்.

எட்டி அவற்றை எடுத்ததுதான் தாமதம்—அவளை அப்படியே உள்ளிழுத்து அணைத்துக் கொண்டார் மணியத்தார்!

அவர் பிடியிலிருந்து வெகு சிரமப்பட்டு உதறிக் கொண்டு ஓடிவிட்டாள் நாகம்மா.

''பழைய கடனைத் தந்தாத்தான் கடன் தரலாம் எண்டு சொல்லி கொண்டு போன காசையும் வாங்கிக் கொண்டு விட்டிட்டார்''

கணபதி போத்தலில் வாங்கிப் போய் வைத்திருந்தகள்ளில் ஒரு கிளாசை தான் பருகிவிட்டு மறு கிளாசை மூன்று பிள்ளைகளையும் எழுப்பி பங்கிட்டுப் பருக கொடுத்தான்,

''நல்லா இருக்கப்பா ஒவ்வொரு நாளும் வாங்கி வந்து தாருங்க''—பிள்ளைகள் மூவரும் ஒரே நேரத்தில் ஏகமனதாக கேட்டனர்.

''அப்பா ஒவ்வொருநாளும் வாங்கி வந்து தருவார். நீங்க படுங்கடா கண்ணு''— விழிகளிலிருந்து நீர் பெருக்கெடுத்தோடக் கூறினாள் நாகம்மா,

மதுவின் ஆறுதலில் கணபதியும் பிள்ளைகள் மூவரும் கண்ணயர்ந்து கொண்டனர்,

நாகம்மாவுக்கு தூக்கம் வருமா? கண் முன்னே கணபதியைப் போலவே பிள்ளைகளும் நிற்கின்ற எதிர்காலம்!

அவள் எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாகி விட்ட நிதர்சனம்.

(யாவும் கற்பனையே)

## எனக்கென எதுவுமில்லை!

எனக்கென எதுவுமில்லை—இந்த
இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர—இவன்
தனக்கொரு நினைவிலனாய்—மிக்த்
தாழ்வுற வாழ்வதைத் தவிர்க்கிலனே—எனச்
சினக்கவும் இயல்வதில்லை—ஒரு
சிரிப்பினில் இகழவும் முடிவதில்லை— பிற
மனக்குறை எதுவுமில்லை—தமிழ்
மானத்தை மீட்கின்ற நாள்வரையில்—இங்கு
எனக்கென எதுவுமில்லை—இந்த
இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர

—புலவர் பெருஞ்சித்திரனார் ('' கனிச்சாறு '')



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை எத்தனை பாரதிகள்!

—சச்சி. சிறிகாந்தா.

பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியர் முதல் மேடையில் முழங்கும் அரசியல்வாதி கூட, 'பாரதி பாடினன்' 'பாரதி பாடல் போதிக்கின்றது' என்று எல்லாவற்றிற்கும் 'பாரதி'யை மேற்கோள் காட்டித் தங்கள் கருத்துக்களை விளக்குகின்றனர். இங்கு, காலத்தின் கண்ணுமூச்சி விளையாட்டால், பிற்கால சந்ததியினருக்கு எமது பாவலர்களின் உண்மையான வரலாறுகள் மறைக்கப்பட்டு விடுவதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்படுகின்றன. இதற்கு, 'பாரதி'யை மேற்கோள் காட்டுவோர் களம் சமைத்துக் கொடுக்கின்றனர்.

'பாரதி' எனப்படுவது ஒரு பட்டமே. ஒரு பட்டமானது ஒருவரை மட்டுமே குறிப்பதாயின் நாம் தாராளமாக அப் பட்டத்தை மட்டும் அவரின் பெயருக்குப் பதிலாகப் பயன் படுத்தலாம். (உதாரணமாக, 'மகாத்மா' எனில் அது மோகனதாஸ் கரம் சந்த் காந்தி மட்டும் தான்!) ஆனல், ஒரே பட்டம் பலருக்கும் இருந்துள்ள போது, அன்னாரின் இயற்பெயருடனேயே பட்டத்தையும் குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. அல்லாவிடில், காலப் போக்கிலே பாவலர்கள் பலரின் இயற்பெயர்கள் மறைந்து போகக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு.

அனேகமாக தமிழ் மக்களிடையே தற்போது 'பாரதி' எனக் குறிப்பிடப்படுபவர் சுப்பிரமணிய பாரதியே. ஆனல், இவருக்கு முன்பே பல பாவலர்கள் 'பாரதி'பட்டத்தைப் பெற்றிருந்தனர். இவர்களைப் பற்றிய விவரங்கள் பல தெளிவாகக் கிடைக்காமல் அருகி வருகின்றன. கடந்த மூன்று நூற்றுண்டுகளில் வாழ்ந்த பாரதியார்களின் பட்டியல் வருமாறு:—

கவிகுஞ்சர பாரதி (18 ஆம் நூற்றுண்டு),
ஆனந்த பாரதி (1786—1846),
கிருஷ்ண பாரதி (1791—1869),
மழவை சிதம்பர பாரதி ( ?— 1897),
கோபாலகிருஷ்ண பாரதி (1810—1896),
வேம்பத்தூர் முத்துவேங்கடசுப்ப பாரதியார் (19 ம் நூற்றுண்டு)
இலட்சுமண பாரதி
நரசிம்ம பாரதி
அம்பிகாபதிப் பாரதி
மதுரகவி பாரதி
நாவலர் சோமசுந்தர பாரதி (1879—1959)
சுப்பிரமணிய பாரதி (1882-1921) — **பாரதியார்**
நவனீதகிருஷ்ண பாரதி (1889—1952)
பாரதி தாசன் (1891—1964)
சுத்தானந்த பாரதி (1897— ?
பால பாரதி ச. து. சுப்பிரமணிய யோகி (1904— ? )

இப்படியாகப் பதினுறுக்கும் மேற்பட்ட 'பாரதி'கள் கடந்த மூன்று நூற்றுண்டுகளில் வாழ்ந்துள்ளனர். இவர்களில் ஒருவரை மட்டும் 'பாரதி' என அழைக்கும் வழக்கம் இன்னும் நீடித்தால், காலப்போக்கிலே ஏனைய 'பாரதி'களின் வாழ்க்கை வரலாறுகள் சிதைவுறுமென்பதும் அவர்கள் இயற்றியுள்ள பாடல்களில் குழப்ப மயக்கம் ஏற்படுமென்பதும் திண்ணம். எனவே, மகாகவி சுப்பிரமணிய பாரதியை 'பாரதி' எனத் தனியே அழைப்பதைக் கைவிட்டு, சுப்பிரமணிய பாரதி என்றே அழைக்கும் பண்பைத் தமிழ் அன்பர்களும் அறிஞர்களும், ஆசிரியர்களும் தொடங்க வேண்டும்.

[பாண்டிய மன்னர் பலராயினும் 'பாண்டியன்' என்றுல் அவன் நெடுஞ்செழியன்தான். பாரதி என்றுல் புதுமைக்கவிதான் என்றுகிவிட்டது. வாசகர் தம்கருத்தை எழுதலாமே —மிகச்சுருக்கமாக — பொருத்தமாக —

ஆசிரியர்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறுக்குகள்

புலோலியூர்
ஆ. இரத்தினவேலோன்



அவள் சிரிக்கிறாள்! என்னைப் பார்த்துத்தான்! தன் தோழிக்கு எதையோ கூறிவிட்டு நிமிர்ந்து என்னைப் பார்க்கின்றாளே! அண்ணலும் நோக்க...அவளும் ...நோக்க..! வகுப்பில் பாடம் நடக்கிறது. யார் அதைக் கவனித்தார்கள்?

ஓரக் கண்ணால் மீண்டும் அவளை நோக்குகிறேன். கவர்ச்சி காட்டி காமத்தை வரவழைத்து காளைகளைத் தம் காலடியில் விழவைக்கும் கலியுகக் கன்னியர்கள் மத்தியில் இப்படியும் ஓர் பண்பான பெண்ணா? — அணிந்துள்ள எளிமையான உடையொன்றே அவள் பண்பினைப் பறைசாற்றி நின்றது! எனக்கு...இந்த எளிமைதான் பிடிக்கும் என்று எப்படி அவளிற்கு...?

ஆ அவள் அழகி! அழகி என்றால் ... ரதி எந்த மூலைக்கு?— நல்ல உயரம், கட்டுடல், சுருள் கேசம்...அந்தி வெய்யிலை மிஞ்சும் மஞ்சள் நிறம்!—எனக்கு நல்லா 'மச்' பண்ணுவாளாம்! —நண்பர் வேந்தனின் அபிப்பிராயம் இது. ஆனால் இவளா அழகி என்பான் நண்பன் ரவி. என்னை அழாக்குறையாகப் பார்க்கும் அலாதிப் பிரியம் அவனிற்கு!

எல்லாம் சரி! அவள் என்னை 'லவ்' பண்ணுகிறாளா?—இது தான் எனக்கு இப்போ 'தீராத' பிரச்சினை.

காதல் ...... மூன்றெழுத்து! அவள்...அவள் பெயரும் மூன்றெழுத்து! அடேயப்பா! இதில் கூட என்ன பொருத்தம்?— ஓர் நாள் ரவியிடம் கூறினேன். "நாசம்! இதுகூட மூன்றெழுத்துத் தான்ரா!" — என்றான் அவன். அவனோ விடுவதாகவே இல்லை!

அவளை நோக்குகிறேன்! எங்கெல்லாமோ சுழன்றடித்து விட்டு அவளின் காந்த விழிகளும் என் விழிகளுடன் மோதின! ஆ! அவளின் அந்த விழிகட்குத் தான் எத்தனை சக்தி?—அவ்வளவுதான். அவள் குனிந்து விட்டாள். காதலனைக் கண்டதும் கால் பார்க்கும் கண்ணகி பரம்பரையைச் சேர்ந்தவளா இவள்?

"என்னவாம்? மச்சான் உன்ரை ஆள்?" —'ஏதோ' பிரச்சினையில் மூழ்கியிருந்த ரவி உஷாவிருன்.

எனக்கென்றும் ஒரு ஆள்! — ஓ! நம்பவே முடியவில்லை! அம்மா, அக்காவைத் தவிர வேறெந்தப் பெண்களையுமே ஏறிட்டுப் பாராத நான் இன்று இப்படி ஆகிப் போனது?...... "எல்லாம் வயதுதான் மச்சான்" — வேந்தன் என்றோ ஓர் நாள் கூறினன்.

இந்த 21 வயதிலேயே என் நண்பர்கள் எல்லோருக்குமே லவ்வேஸ்! ரவிக்கு கீதா! வேந்தன்...தனவதி......இப்படி! எனக்கு மட்டும் லவ்வர் இல்லாததை......... எக்கவுண்டன்ஸ் ஸி படிக்கவந்த என்னைக்கூட படிப்பில் ஏதோ குவாலிவிக்கேஷன் குறைந்ததைப் போலக் கருதி பல விடயங்களிலும் அவர்கள் என்னைப் புறக்கணித்த நாட்கள் எத்தனை? 'இந்த லவ்' மட்டும் சக்சஸ் ஆனா நண்பர்கள் மத்தியில் நானும் ஒருவனாக...

பாடங்கள் நடக்கும் தோறும் பாவை அவள் என்னைப் பார்த்துப் புன்னகைப்பது ஏதோ உண்மைதான்! அந்தப் புன்னகை ஒன்றை மட்டும் வைத்துப் பெண்ணவள் என்னைக் காதலிக்கிறாள் என்று எப்படி? கடிதக் காதல்கள் கூட காகித ஓடமாகும் இந்தக் காலத்தில்?

அவள் அழகிற்கு ஈடளிக்க நான் ஒன்றும் குறைந்தவனல்ல! ஆறடி உயரம், சந்தனத்து மேனி...போற்றும் படியான அழகனாய் நான் இல்லாவிட்டாலும்..... அதுதான் இல்லாமல்; அறிவைத்தான், அவள் எதிர்பார்த்தாள் ஆயின்...அதிலும் நான் குறைந்தவனா என்ன?

"என் டவுட்ஸ்?"— வகுப்பு முடிவதற்கு அறிகுறியாக லெக்ஷரர் இறுதியாக வினவுகிறார்! ...யாரிற்கு பாடத்தில் சந்தேகம்? நானூறு பேர் நிரம்பியிருந்த அந்தக் கட்டிடம் 'மாக்கெட்' போலாகிறது. பாதிப் பேரும் பஞ்சாகி விட்டனர், எப்போஇந்தச் 'சனியன்' முடியும் என்ற எதிர்பார்ப்பில்! இறுதியாக... லெக்ஷரர் படி இறங்குகிறார்!

'வைலை' மூடிக்கொண்டு மெல்ல...... மெல்ல......நானும் எழும்புகிறேன்.. அருகே ரவி. என்னவளும் தோழியும் முன்னேறுகின்றனர்!

காதல்——அது புனிதமானது! தெய்வீகமானதுங்கூட. காலத்தால் அழியாத அது இன்று கடற்கரை மணலிலும் களியாட்ட விழாக்களிலும்... அருள் சூழ்ந்த பஸ் தரிப்புக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிலும் ஏன் சில சமயங்களில் வகுப்பறைகளிலுங் கூட படும் பாடு அப்பாடா......!

சந்தர்ப்ப வசத்தால் இரு தூய உள்ளங்களின் அன்பின் இணைவே காதல்! எதிலும் அனுபவம் வேண்டும் என்ப தற்காககாதலிலும் அதுதேவை என்று எண்ணி சந்திக்கும் பெண்களுடன் தவருகப் பழ காதே! காமத்திற்கு அடிமை யாகி ... தூய காதலைக் களங் கப் படுத்தாதே!—படிக்கவென நகரேறியபோது எனக்குத் தந் தையார் தந்த 'அட்வைஸ்' இது!

உடல் வனப்பில் உல கையே மறந்து அவளையே அடையவேண்டும் என அலைந்து இறுதியில் ஏமாற்றம் எஞ்சு கையில் விரக்திக்கு கைகொடு த்து வாழும் நவீன அம்பிகா பதிகள் பலரை நான் பார்த் திருக்கிறேன்! அதுபோல எனக் கும் நேராது என்னவள் எப்ப டியும் எனக்கு அமராவதியாக வாய்க்க வேண்டும் என்று வேலவன் உட்பட நான் வேண் டாத தெய்வங்களே இல்லை! — தந்தையாரின் அட்வைசை அவள் நினைப்பு மழுக்கும்போது என்னுள் இப்படி நான் எண் ணிக் கொள்வதும்; படிக்க வந்துவிட்டு இப்படிக் காதல்... காதல் என்று சாவது ' என் ருேர் நினைப்பு மேலெழ "ஓ! மைகோட்" என ஓலமிடு வதும் என்னுள் அப்போ சர்வ சாதாரணம்!

இப்போதெல்லாம் ........... படிக்கவென நான் மேசையில் அமர்ந்தால். அவளையே பாடப் புத்தகத்தில் காண்பதுண்டு! சட்டப் புத்தகம் கையில் புரள்கையில் அவள் சட்டை நினைவிற்கு வந்து தொலைப்ப தும்...கணக்கியலை பார்த்தால் அவளை காண உள்ள நேரத்தை மணிக் கணக்கில் எண்ணிப் பார்ப்பதும் சகஜமாகிவிட் டது!

மொத்தத்தில் இப்போ... நான் நானுக இல்லை!

"நீ முன் மாதிரி நல்லா நடந்தால்... இப்ப அந்த பஸ் ஸில நாங்கள் போயிருக்க லாம்!" — ஸ்ராண்டில் நின்ற பஸ்ஸைக்கண்டு பாதிப்பேரும் பறக்கும்போது ஏக்கத்தோடு ரவி சொன்னுன்.

இந்த 'விபத்து' மட்டும் நடக்கா விட்டால் நான்கூட நன்ருகத்தான் நடந்திருப் பேன்! "காதல் என்பது ஒரு விபத்துதான்! முற்றுந் துறந்த வனைக்கூட இந்த காதல் கனிய வைக்கும் சக்திகொண்டது!" —என் 'மாறுதல்கள்' பற்றி கூறும்போது வேந்தன் அப்ப டிச் சொல்வான். "நாகரீக உலகில் காதலும் ஓர் நாகரீக மாகிவிட்டது! அன்ருட தேவை களுள் அதுகூட அடங்கிவிட் டது!"—காதலிப்பவர்கள் வெறும் கிறுக்கர்கள் என தத் துவம் பேசும் நண்பன் இரங்க னிற்கு இப்படி நான் கூறுவேன்.

ஸ்ராண்டில் நின்ற பஸ் ஸைக் கண்டு எல்லோரும் ஓடி னுலும் என்னவள் மட்டும்... ஓடவேயில்லை! என்னுல் தான் ஓடமுடியாதே!

"என்னை விட்டு ஓடிப் போக முடியுமா? இனி முடி யுமா?—' தேநீர் கடையொன் றில் பாடல் பலமாக ஒலிக்கி றது.

இவளது விடயத்தில் நான் நானுக இல்லாது போனது...? காதல் திருமணங்கள் பல தோல்வியை தழுவுவதை நேரில் பார்த்த நானே இப் படி... ?—அவள் அழகைவிட அவளது அடக்கமும் எளிமை யுமே என்னைத் தடுமாறவைத் தது! காரியாலயத்திலும்...... கடைத் தெருக்களிலும் சதா கவர்ச்சி பாவைகளை கண்டு சலித்த எனக்கு அவளது பண்பு புத்தொளியாய் அமைந்தது! விளைவு காதலிக்கக் கூடாது என்ற எனது வரட்டுக்கௌர வங்களை முறியடித்தேன், பட்ட மரம் போன்ற என் மனதி

## உயர்ந்த கட்டிடம் எது?

கடந்த சித்திரை மாத சுடர் இதழில்— 'உலகத்திலேயே மிக உயரமான கட்டிடம் 'எம்பயர் ஸ்ரேட்' என்னும் கட்டிடம், அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது. இதன் உயரம் 1110 அடிகள், 120 மாடிகளைக் கொண்டது' என கதிர் மாணிக் கம் என்பவர் தகவல் கொடுத்திருந்தார். இது தவறு.

உலகிலேயே மிக உயர்ந்த கட்டிடம் சிக்காக்கோ நகரில் உள்ள 'ஸியர்ஸ் ரோபக்டவர்' என்பதுதான். இதில் 110 மாடிகள் உள்ளன. இதன் உயரம் 442 மீட் டர்கள். இக்கட்டிடம் 1973ல் கட்டிமுடிக்கப்பட்டது.

'எம்பயர் ஸ்டேட்' கட்டிடம் இப்போது 3வது இடத் திற்கு வந்து விட்டது.

அமெரிக்காவில் முதல் விண்ணை முட்டும் கட்டிடம் 1884 ம் ஆண்டிலேயே கட்டப் பட்டுவிட்டது.

தகவல்: செல்வி சாந்தி சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் காதல் தளிர்ப்பு உருவானது. மாறுதல்கள் கொண்ட மனிதன் ஆனேன் நான்!

அவளே என் மனைவி என்பது உறுதியாகுகையில் வீட்டு நிலவரம் என்னைத் தட்டிக் கேட்டதும்...என் தங்கையின் எண்ணம் தலை தூக்குவதும்; எதையாவது சொல்லி என் மனதை நானே சமாதானப் படுத்திக்கொள்வதும்--இப்போ என் படுக்கைப் போராட்டமாகிவிட்டது!

காதலிற்காக அவனவன் நாயாக அலையும் இந்தக் காலத்தில் இப்படித் தேடி வந்தவளை......எப்படி ஒதுக்க முடியும்?

ஸ்ராண்ட் நெருங்கிவிட்டது.

எங்கள் றூட்டில்... அவள்! அருகே தோழி. நான்...பக்கத்தில் ரவி.

அவளுடன் மனம்விட்டுக் கதைக்க என் மனம் ஆசை கொள்கிறது! . நானு முதலிலே கதைக்கிறது அவ்வளவு அழகல்ல!

பற்றிக்கேட்டும் பவுடர் பூச்சுமாக திரியும் 'மொட்' வாலிபர் இருக்க ... எளிமையே உருவான என்னை இவள்...என்றால் எத்தனை எளிமையானவள் அவள்? அவளையே கவர்ந்த எனது எளிமை...எனது பெற்றோர் கற்றுத் தந்தது.

சிவபூசையில் இசைக்கப்படும் கரடி வாத்தியம் போல ...எங்களருகில் இன்னொருவன். கிளாஸ் மேற். வந்தவன் சும்மா நிற்கக்கூடாது?சினிமாதொட்டு சினிமா வரை சுற்றி வந்தான்! ஒரே 'அலுப்பு' எனக்கு!

தேநீர்க் கடையில் பாடல் மாறுகிறது! 'யார் அந்த நிலவு'?—வந்தவன் வினவினான் என்னவளை கண் ஜாடை காட்டி, போச்சடா! — எனக்கு பற்றிக் கொண்டு வந்தது.

''நம்ம ஊர் தான்''— அர்த்த சிரிப்போடு அவன். இவனேன் என்னவள் மீது இப்படி சிரத்தை எடுக்கிறான்? ஒருவேளை என் 'வண்டவாளம்' ஏதாலும் தெரிஞ்சு வைச்சானோ? — என்னுள் பயம் பற்றிக் கொள்கிறது. இவனை எப்படியாவது காய் வெட்ட வேண்டும்!

அவள் ... இப்போதும் என்னையே நோக்குகிறாள்! கள்ளமாக அவள் அழகை அள்ளிப் பருகுகிறேன் நான் ..... சாய் நான் மட்டும் கண்ணதாசனுப் பிறந்திருந்தால் அவளையே கவியாக்கியிருப்பேன்`

கற்பனையில் மிதக்கிறேன் நான் கதாசிரியர்களைப்போல-

கல்வியின் வெற்றிப் பூரிப்பில் துணிந்து சென்று என் காதலியிடம் நேராக விடயத்தைக் கூறுகிறேன். நாணம் மேலிட அவள் முகத்தை மூடிக் கொள்ளவே . கள்ளி! —ஆசை மீதியால் கடிந்து கொள்கிறேன்.

எனக்கு இப்படி ஒரு இலட்சிய மனைவி?... எனக்கும் இவளிற்கும்.

''றியிஸ்ரேஷன் முடிஞ்சுது! ஆவ்ரத எக்சாம் வெடிங்—'' என்ன?

அவன்தான் தொடர்கிறான். ''உந்த கேளைப் பற்றித்தான் சொன்னனான்! மாப்பிளை எக்க வுண்டன்''— ஏதோ சொல்கிறான் அவன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கைதிரே யுள்ள மாடமாளி ளீ எல்லாம் தூள்தூளா கின்றன. இந்த உலகமே தலை கீழாகிறது எனக்கு!

"உந்த கேள் ஒரு மாதிரி யான கறக்ரர்!...பரிதாபத்திற் குரியவர்களைக் கண்டால் பல் காட்டுவது அதன் வழக்கம்"

ஓ! நான் பரிதாபத்திற் குரியவனு;

தூரத்தே ஓர் பஸ் மிக ஆறுதலாக வருகிறது!

அவளும்... ..பஸ்ஸுள் ஏறி விட்டாள் மெல்ல......மெல்ல நான்!......எனக்கு ரவி பக்கத் துணை; — நான் ஏறுகிறேன்; விபத்தில் இழந்துபோன என் வலது காலிற்குப் பதிலாகப் பொருத்தப்பட்ட பொருத்துக் காலை முன்வைத்து நானும்... ஏறுகிறேன்! அப்போ.........

அவளை நோக்குகிறேன்.

அவள் சிரிக்கிறுள்! என் னைப் பார்த்துத்தான்......தன் தோழிக்கு எதையோ கூறி விட்டு நிமிர்ந்து என்னைப் பார்க்கிறுள் ..இப்போ ...அவ ளது பார்வையில் காந்தம் தெரியவில்லை! வெறும் கிறுக்கு களே. கண்ணில் திரையிடுகின் றன.

(யாவும் கற்பனையே)

## சுடர் வட்டம்

**தி. சண்முகராஜா**
168. குவாரி லேன்
கல்முனை 2.

**பொழுதுபோக்கு:** உதைபந் தாட்டம் கிரிகட் விளையாடுதல், வாஞெலிகேட்டல்.

**சிற். ஸ்ரீவிஜயா,**
பத்மினி பவனம்,
கொக்குவில் மேற்கு,
கேணியடி.

**பொழுதுபோக்கு:** வாஞெலி கேட்டல், பத்திரிகை பார்த் தல், முத்திரை சேகரித்தல் வெளிநாட்டு நாணயங்கள் சேர்த்தல்.

**து. சந்திரா**
92/9, சேதவத்த ரோட்,
வெல்லம்பிட்டிய.

**பொழுபோக்கு:** உதைபந் தாட்டம் கிரிகட் விளையாடு தல் வாஞெலி கேட்டல்.

**அ. தேவேந்திரன்**
92/6 வேக்கந்த வீதி,
கொழும்பு—2

**பொழுதுபோக்கு:** கிரிகட் விளையாடுதல் கதைப் புத்தகம் வாசித்தல், பேஞ நண்பர் தொடர்பு கொள்ளுதல்.

**மா. ரமணி**
பூம்புகார், நகர் கல்மடு
வவுனியா

**பொழுதுபோக்கு:** பத்திரிகை நாவல்கள் வாசித்தல், கதை, கட்டுரை நாடகம் எழுதுதல்.

**வ. ஸ்ரீவசந்தகுமார்**(ரகு)
சாந்தா தோட்டம்
ஆவரங்கால் புத்தூர்

**பொழுதுபோக்கு:** வாஞெலி கேட்டல், பத்திரிகைவாசித்தல் சஞ்சிகை வாசித்தல்

**ச. துரைராசா**
சிவபாதம் ஸ்ரோர்
பிரதான வீதி, செட்டிகுளம்

**பொழுதுபோக்கு:** பேஞ நண் பர் தொடர்பு, பத்திரிகை வாசித்தல்.

**ந. கலையரசி**
32/12 லட்சுமி ரோட்
புத்தளம்

**பொழுதுபோக்கு:** பத்திரிகை வாசித்தல், வாஞெலி, கதை, கவிதை.

**A. G. கோபி**
குணசேகரா ஸ்டோர்ஸ்
குடாகம அட்டன்.

**பொழுதுபோக்கு:** உதைப் பந்தாட்டம் வாஞெலி கேட் டல், சினிமா பார்த்தல், கதைப்புத்தகங்கள் வாசித்தல்.

**பா. ஜெயக்குமார்**
அன்னகிரி அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

**பொழுதுபோக்கு:** வாஞெலி கேட்டல், சினிமாபார்த்தல், விளையாடுதல் டி. வி. பார்த் தல்.

**எல். எஸ். பாலா**
இல. 212 ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு—12

**பொழுதுபோக்கு:** வாஞெலி கேட்டல், சிறுகதை எழுதல், உதைபந்தாட்டம்.

**தி. சுரேந்திரன்**
தபாற்கந்தோர் வீதி,
வல்வெட்டித்துறை

**பொழுதுபோக்கு:** கதை கவிதை கட்டுரை, கரம், வாஞெலி,சினிமா போன்றவை

**எஸ். கமல்ராஜ்**
12, ஓல்ட் ரெட் ஹவுஸ் ரேட்
மட்டக்களப்பு

**பொழுதுபோக்கு!** பத்திரிகை கதைப்புத்தகம், சஞ்சிகை வாசித்தல், புகைப் படம் எடுத் தல்.

**ஜி. எஸ். நடராசா**
கள்ளிக்குளம் காமடு,
வவுனியா.

**பொழுதுபோக்கு:** கவிதை, கட்டுரை, நடிப்பு (நாடகங் கள்) திரைப்படம், பேஞ நண்பர் தொடர்பு.

**அன்புவாணன்**
74/3 விவேகாநந்த மேடு,
கொழும்பு-13

**பொழுதுபோக்கு:** கலைத் துறை ஈடுபாடு.

**எம். மகாலிங்கம்**
டெமேரியா 1ஆம் பிரிவு
பசறை.

**பொழுதுபோக்கு:** கரப்பந் தாட்டம், வாஞெலி, ரேடியோ பழுதுபார்த்தல், நாவல்கள் வாசித்தல்.

**எஸ். யோகானந்தன்**
"ஆனந்த பவனம்"
கரணவாய் தெற்கு,
கரவெட்டி

**பொழுதுபோக்கு:** நீச்சல் கிரிகெட், சினிமா, கதைப்புத் தகம் வாசித்தல் போன்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கண்ணோட்டம்

# கண்ணதாசன் கவிதைகள்

பொன்

வாழும் கவிஞர்களில் தனித்தன்மை பெற்று விளங்குபவர் கவிஞர் கண்ணதாசன். அவரது கவிதையாற்றலைப் போற்றி மகிழ்பவரும் அவரது கவி நயத்தைப் பாராட்டி மகிழ்பவரும் ஆயிரமாயிரமாவார்கள்.

* * *

இலக்கிய நூல்கள் பலவற்றைத் துறை போகக் கற்றவர் கவிஞர் கண்ணதாசன் என்பதனாலோ என்னவோ தெரியாது அவரது பாடல்களில் சங்க இலக்கியங்களின் சாயல்களையும் காணலாம். இந்நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியார், பாரதிதாசன் முதலான கவிஞர்களின் பாடல்களிற் காணப்படுவது போன்ற எளிய நடையையும் இனிய தமிழையும் நாம் சுவைத்து மகிழலாம்.

திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் ஒரு திருக்குறளில் பின்வருமாறு கூறுகிறார்.

**''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல் ''**

அதாவது ஒரு செயலைச் செய்யக் கூடியவன் இவன்தான் என சீர்தூக்கிப் பார்த்து அச்செயலைச் செய்யுமாறு அவனிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பது இக்குறளின் பொருளாகும். இந்தக்குறளை ஞாபகப் படுத்தும் வகையில் கண்ணதாசனின் இந்தக் கவிதை அமைந்துள்ளது.

**'' இதனை இதனால் இவர் முடிப்பார் என்றே தான் அதனை இதனை அங்கங்களாக்கி வைத்தான் .''**

அதாவது இறைவன் இச்செயல்களையெல்லாம் இவர்தான் முடிப்பார் என்றாய்ந்து அச்செயல்களையெல்லாம் அதற்கேற்ப அமைத்து வைத்தான் என்பது இக்கவிதையின் பொருளாகும்.

புறநானூறு எனும் இலக்கியம் தமிழர்களது வீரத்தைப் பறை சாற்றி நிற்கும் முதன்மை நூலாகும். போர்க்களத்தைப்பற்றி அழகுற எடுத்தியம்பும் பின்வரும் பாடல் அந்நூலில் காணப்படுகின்றது.

**' பொரு தடக்கை வாள் எங்கே? மணிமார் பெங்கே?
போர் முகத்தில் எவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோள் எங்கே ? எங்கே ? என்று
பைரவியைக் கேட்பானைக் காண்மின் காண்மின்''**

என்ற இந்தப் பாடலில் கையிலே வாள் எங்கே என்றும், மணிமார் பெங்கே என்றும் போர்க்களத்தில் யார் வந்தாலும் புறங் கொடுக்காத பரந்த தோள் எங்கே? எங்கே? என்று கேட்டுப் போர் வீரர்களுக்கு உற்சாக மூட்டப்படுகின்றது. உணர்வூட்டப் படுகின்றது.

இதேபோன்ற பாடலை எமக்கு கவிஞர் கண்ணதாசனின் பின்வரும் பாடல் நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

**'' சீரிய நெற்றி எங்கே ?
சிவந்த நல்லிதழ்கள் எங்கே ?
கூரிய விழிகள் எங்கே ?
குறுநடை போனா தெங்கே ? ''**

அதாவது இக் கவிதையில் ஒரு பெண்ணின் ஆளுமையைக் கவிஞர் பாட்டாக வடித்து அதிலே சீரிய நெற்றி என்றும் சிவந்த நல்லிதழ்கள் என்றும் கூரிய விழிகள் என்றும் குறுநகை என்றும் எடுத்துரைத்து இச் சிறப்புகளைக் காணவில்லையே என ஆதங்கப் படுகின்றார். அவரின் ஆதங்கத்தின் வெளிப்பாடு அழகிய பாட்டாக மேற்கண்டவாறு உருவாகியுள்ளது.

இந்த நூற்றாண்டில் கவிதைத்துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர் மகாகவி பாரதியார். அவர் தமது இலட்சியம் பற்றிக் குறிப்பிடுகையில் எமக்குத் தொழில் கவிதை; இமைப்பொழுதுஞ் சோராதிருத்தல், நாட்டுக்காக உழைத்தல் என எடுத்தியம்பினர். தமது கடமைகளைப் பற்றிக் கூறிய பாரதியார் தமது கவிதைகளைப் பற்றிக் கூறுகையில்,

**'' சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது
சொற் புதிது, சோதி மிக்க
நவ கவிதை யெந்நாளுமளியாத மகாகவிதை ''**

எனத் தமது கவிதைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். இக் கவிதை வரிகளில் அவரது கவிதை பற்றி ஒரு மகிழ்ச்சியும் நம்பிக்கையும் கலந்து காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலே அதிகப்படியான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு நூலாக விளங்குவது திருக்குறளாகும். அந்தத் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரால் தமிழ் கூறும் நல்லுலகம் புகழும் பெருமையும் பெற்றது. இதனுல் வள்ளுவனை உலகினுக்குத் தந்தமையால் தமிழ் நாடு வானளாவப் புகழ்பெற்றது எனப் பாரதியார் குறிப்பிடுகின்ருர்.

**"வள்ளுவன் தனை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"**

என்பது பாரதியார் பாடலாகும். ஆனுல் கவிஞர் கண்ணதாசன் வள்ளுவன் பற்றிப் பாடும்போது பின்வருமாறு குறிப்பிடுகின்ருர்.

**"வள்ளுவன் தனை உலகினுக்கே தந்து**
**உள்ளதும் கெட்ட தமிழ்நாடு"**

இந்தப் பாடல் மூலம் கவிஞர் கண்ணதாசன் எதை வலியுறுத்த விரும்புகிருர் என்பது ஒரு விடைகாண முடியாத கேள்வியாக இலக்கியத் திறனய்வாளர் மத்தியில் இவ்விடயம் நின்றுலாவுகின்றது.

இந்தியாவின் சுதந்திரம் என்பது ஆட்சி பீடத்தில் ஏற்பட்ட மாற்றமாக இருந்துற்ற வேளையில், அது சாதாரண மக்களுக்கு அர்த்தமற்றுக்காணப்பட்ட போது பல கவிஞர்கள் மனம் குமுறினுர்கள். வறுமை, அறியாமை, சுரண்டல், சமுதாய ஒழுங்கினங்கள், தீண்டாமை முதலிய தளைகளிலிருந்து விடுபடாமல் மக்கள் கட்டுண்டு கிடப்பதை கண்ட கவிஞர் எஸ். டி. சுந்தரம் அவர்களது உள்ளம் எரிமலையாகக் குமுறியது. அவரது குமுறல் கவிதைப்பிழம்பாகப் பின்வருமாறு உருவெடுத்தது.

**"சென்ற பேய் நிறம் மாறித் திரும்பி வந்த**
**வினைபோல்**
**வெள்ளையர்க்குப் பதிலிங்கே உள்ளவரால்**
**கொடுமை"**

மேற்கண்ட கவிதை வடிவில் கவிஞர் கண்னதாசன் தான் ஆரம்ப காலத்தில் அங்கம் வகித்த கட்சிக்கொள்கைகளுக்கு ஏற்ப அக்கட்சிக் கொள்கைகளை பிரதிபலிக்கும் வகையில் பாரதப் பிரதமராகவிருந்த ஜவகர்லால் நேருவைக் கண்டிக்கிருர்.

**"போதி மரப்புத்தன் போய்விட்டான்**
**என்றிருந்தோம்**
**பாதி வழி போன அவன் பண்டிதராய்த்**
**திரும்பி வந்தான்"**

இந்த நூற்றுண்டின் கவிஞர்கள் வரிசையில் பாரதியாருக்குப் பின் பாரதி தாசனுக்குச் சிறப்பான இடமுண்டு. பாரதியாருக்குப் பின் தமிழ் உணர்வை மேலோங்கச் செய்து உணர்ச்சி கொப்பளிக்க பாடல்களை இயற்றியவர் பாரதிதாசன் என்பது இலக்கியத்திறனய்வோர் சிலரது முடிவாகக் கூட இருக்கின்றது. அவர் தமது கவிதையொன்றில் கூண்டிலடைக்கப்பட்ட கிளி ஒன்று தனது விடுதலையை மற்றவரிடம் இரங்கிக் கேட்டுப் பெறுவதைப் போல். கற்பனை செய்து மற்றவர்களிடம் சுதந்திரம் கோரி நிற்போரைக் கிளியின் நிலையில் வைத்து நகைப்போடு கேட்டு சாடுகிருர். இவ்வாருன நிலையில் வாழ்வோரைச் சிந்திக்கச் செய்கிருர்.

**தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ**
**அக்கா அக்கா என்று நீ அழைத்தால்**
**அக்கா வந்து கொடுக்கச்**
**சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே?"**

என்பது பாரதிதாசனின் கேள்வி. அதாவது சுதந்திரம் என்பது ஒருவர் கொடுக்க மற்றவர் பெறக் கூடிய சுக்குமல்ல மிளகுமல்ல என்பது அவர்வாதம்.

பாரதிதாசனின் மேற்கண்ட கவிதையை எமக்கு ஞாபகமூட்டும் வகையில் கவிஞர் கண்ணதாசன் ஒரு பாடல் ஒன்றை இயற்றியுள்ளார்.

**திண்ணையிலே காண்பேன் திராவிட**
**நாடென்றுனே**
**திண்ணையிலே காண்பதற்கு திராவிட**
**நாடென்பதென்ன**
**தொன்னையிலே நெய்யா? சோற்றுப்**
**புளிக்குழம்பா?"**

என்ற பாடல் மூலம் கவிஞர் கண்ணதாசன் திராவிட நாடு கோரி இயக்கம் நடத்தியவர்களைக் கண்டிக்கிருர். கவிஞர் கண்ணதாசன் தன் ஆரம்பகால ஆசிரியர் வாழ்வில் திராவிட நாடு கோரி இயக்கம் நடத்திய அரசியல் பிரமுகர்களில் ஒருவராகும்.

**"செவ்வழி தமிழர் ஆந்திரர் ஒன்றுய்**
**திராவிடம் காணல் நன்றுகும்"**

எனப் பாட்டுரைத்து தமது கட்சிக்கொள்கைகளை முன்னெருகால் தீவிரமாகப் பிரசாரம் செய்த கவிஞர் கண்ணதாசன் மேற்படி திராவிட நாட்டு இயக்கத்தினரை இவ்வாறு சாடுகிருர் என எண்ணத்தோன்றும். அவரது அரசியல் பாடல்கள் எப்பொழுதுமே முரண்பாடும் சிக்கலும் நிறைந்தவையாகும். இவர்மீது பலரும் பெரும் கண்டனங்களும் தாக்குதல்களும் நடத்த இக்கவிதைகளே வழியாகவும் அமைந்துள்ளன.

இவ்வாருக கவிஞர் கண்ணதாசனின் கவிதைகள் மகத்தான உணர்ச்சிகளின் அழகான வெளிப்பாடாக மிளிர்கின்றன. சாதாரண சுருத்துக்களை அழகாக அவர் வெளிப்படுத்தும் முறையினுல் அக்கவிதைகள் அருமையாக அமைந்து விடுகின்றன. இலக்கியத் துறையில் மூழ்கி அவர் நல்ல முத்துக்களை எடுத்தவர் என்பதால் அவரது கவிதைகளில் ஏனைய புலவர்களது பாடல்களின் சாயலோ அல்லது ஏனைய கவிஞர்களின் கவிதைகளின் தொனிப்போ இருப்பது வியப்புக்குரியதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரைப் பூக்கள்

வண்ண நிலவனுடைய யதார்த்தத் தரத்திலான சிறுகதைகள்—பெரிய புத்தகக் கம்பனி வியாபாரிகள் யாரும் பதிப்பிக்காத நிலையில் நல்ல வாசகர்கள் — நண்பர்கள் சிலரின் முயற்சியால் எஸ்தர் என்ற தலைப்பில் வெளிவந்தன. அந்தத்தொகுப்பு இலக்கியத்துறையில் பெரும் பாராட்டு பெற்றுக் கொண்டிருந்தவேளை இவர் வயிற்றுப் பசியோடும் இருமலோடும் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தார். ருத்ரப்பாவை இயக்குநராய்க் கொண்ட 'அவள் அப்படித்தான்' படத்துக்கு வசனம் எழுதியவர்களில் இவரும் ஒருவர். தட... வாழ்க்கை காதலுக்கு லாயக்கற்றது. என்ற நிலையில் மாப்பாசானின் Muni Oriol தரத்தில் தமிழின் முதல் காதல் நாவல் 'கடல் புரத்தில்தான்' ... சமபத்தில் வெளிவந்த இவரது நாவல் சம்பாநதி. வண்ண நிலவன் இப்போது துக்ளக்கில் உதவி ஆசிரியராக பணி புரிகிறார்.

தமிழக எழுத்துத்துறை பற்றி ஈழம் நிரம்பவுமே தெரிந்து வைத்திருக்கிறது. ஈழத்து முயற்சிகள்தான் பெரும்பாலும் அங்கு அறியப்படுவதில்லை. ஒரு வழிப்பாதையின் குறைபாடு இது என்று கூறப்படுகிறது. ஓரளவு உண்மை இருக்கிறதுதான். ஆனால் முழுவதுமான உண்மையை உணரும்போது கசப்பு நெஞ்சை நிறைக்கும். தமிழகத்தை நமது பெரும்பான்மையான வாசகர்கள் எப்படி அறிந்து வைத்திருக்கிறார்கள். வந்து குவியும் வியாபாரக் குப்பைகளில் தரிசனம் தரும் சங்கரிகள், சுஜாதாக்கள் மூலமாகத்தான். இவர்கள்தான் தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர் என்பது பலரது பிரேமை.

கூலிக்கு எழுதிக்குவிக்கும் இத்தகைய வியாபாரிகளால் சமூகத்துக்கோ தமிழுக்கோ துளியும் நன்மை இல்லை.

உண்மையில் சமகாலத்து தமிழகத்தின் சிறந்தபடைப்பாளிகள் என்று பட்டியல் போட்டால் பணம் உழைக்கும் பலரும் விலாசமற்றுப் போய்விடுவார்கள். அது நாளைய இலக்கிய வரலாற்றின் வேலை. நாம் இன்று நம் கவனத்துக்கு எட்டிய படைப்பாளிகளைப்பற்றி —பெரும்பாலும் இளைய தலைமுறைபற்றி இங்கு கவனம் திருப்புவோம்.

தஞ்சாவூர் பகுதியைச் சேர்ந்த ந. முத்துசாமி சென்னையில் அலுவல் புரிந்து வாழ்ந்து வந்த போதும் புதுமைப்பித்தனைப்போல் தன் இளமைக்களமாகிய தன்னூரை அசை போடுகிறவகையில் எழுதியிருக்கிற சிறுகதைகளில் நீர்மை, வண்டி ஆகியவை தமிழின் சிறந்த கதைகள் வரிசையில் இணைக்கத்தக்கவை. தற்சமயம் 'கூத்துப் பட்டறை' என்று சென்னையில் இயங்கிவரும் அமைப்பில் பங்கு கொண்டு தமிழின் கிராமியக் கலைவடிவமான கூத்து பற்றியும்—அதில் விற்பன்னர்களான புரசை நடேசத்தம்பிரான், கண்ணப்பத் தம்பிரான் ஆகியோர் பற்றியும் பத்மா சுப்பிரமணியத்தின் பரதநாட்டியம் பற்றியும் வைகை இதழில் தொடர்ந்து எழுதி வந்தார். நாற்காலிக்காரர், சுவரொட்டிகள், ஆகிய இருவருடைய நவீன நாடகங்கள் புத்தகவடிவில் வெளிவந்ததோடு நாடகமாய் நடிக்கப்பெற்றும் பெருமை பெற்றுள்ளன.

சென்னையில் கூட்டுறவுத் துறையில பணி புரியும் பூமணி இந்தத் தலைமுறையின் மிகச் சிறந்த யதார்த்த எழுத்தாளர் என்று கணிக்கப்பெறுபவர், வயிறுகள், நீதி என்ற சிறுகதைத் தொகுதிகளும் 'பிறகு' என்ற நாவலும் வெளிவந்துள்ளன.

விவசாயியான கி. ராஜநாராயணன் தாமரையில் எழுத ஆரம்பித்தவர். கதவு என்ற யதார்த்த சிறுகதையும் அதே தலைப்பிலான சிறுகதைத் தொகுப்பும் இவரை பிரதிநிதிப்படுத்துவன. கன்னிமை, வேட்டி என்ற மற்றும் இரு தொகுதிகளும் தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள் என்ற தொகுப்பும் வெளிவந்துள்ளன. கிடை என்ற இவருடைய குறுநாவல் தமிழின் தலைசிறந்த படைப்புக்களில் ஒன்றாக மதிக்கப்படுகிறது. இவர் வாழுகிற கரிசல் நிலம்தான் இவரது படைப்புகளின் தளம். கோபல்ல கிராமம், பிஞ்சுகள் என்ற இரண்டு நாவல்கள் வெளிவந்துள்ளன. ராஜநாராயணன் ஓய்வான ரசனைக்காரர்; சங்கீத ஈடுபாடும், டி. கே. சி, காருக்குறிச்சி அருணாசலம், விளாத்தி குளம் நல்லப்ப சுவாமிகள் போன்றோரோடு நேரடித் தொடர்பும் இருந்ததுண்டு.

'வேலி மீறிய கிளை' என்கிற புதுக்கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் ஜெயராமன். தமிழின் குறிப்பிடத் தகுந்த தொகுப்புகளில் இதுவும் ஒன்று. வாழ்க்கையின் உக்கிரத்தை கவித்துவப் படுத்துதல் என்பதை இவருடைய கவிதைகளின் அனுபவத்தின் ஊடாக உணரலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராகப் பணியாற்றும் பொன்னீலன் வாழ்க்கையை நேரடியாகப் பார்க்கத் தெரிந்தவர் என்பதை அவரது 'ஊற்றில் மலர்ந்தது' என்ற குறுநாவல் தொகுப்பு எடுத்துக் காட்டுகிறது. முற்போக்கு எழுத்தாளர் வெளிப்படையாகவே கூறி பெருமைப்படும் இவர் தன் எழுத்துக்கு வாழ்க்கைச் சார்பு கொண்டிருப்பதை தனது ஒவ்வொரு படைப்பிலும் புலப்படுத்துவது தனிச்சிறப்பு. இவருடைய 'கரிசல்' என்ற நாவல் ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்படுகிறது. 'உறவுகள்' என்ற இவருடைய குறுநாவல் 'பூட்டாத பூட்டுக்கள்' என்ற பெயரில் இயக்குநர் மகேந்திரனுல் படமாக்கப்பட்டது.

'அஸ்வகோஷ்' என்ற பெயரில் எழுதும் ஆ. ராஜேந்திரசோழன், கதைகளில் மட்டுமல்லாது கலாசார விடயங்கள் குறித்தும் தேர்ந்த ஞானத்தை வெளிப்படுத்தியவர்களில் குறிப்பிடத்தகுந்தவர். எழுத்தைவிட செயல் முக்கியமானது என்று சிலகாலம் எழுதாமலிருந்துவிட்டு மீண்டும் இப்போது எழுத ஆரம்பித்திருப்பது மகிழ்ச்சியான விடயம். இவருடைய 'பறிமுதல்' என்ற தொகுப்பு வெளிவந்துள்ளது. ஆசிரியராக தொழில் புரிகிருர்.

1974-75 இரு ஆண்டுகளிலும் தமிழ்நாட்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளராக இலக்கியச் சிந்தனை அமைப்பினுல் தேர்வு செய்யப்பட்டவர் வண்ணதாசன். முறையே 'தனுமை' 'ஞாலகம்' என்ற இரண்டு கதைகளும் அந்தப் பெருமையை இவருக்குத் தேடிக்கொடுத்தன. நா. பார்த்தசாரதி வல்லிக்கண்ணன் இருவர் மீதும் அபிமானம் கொண்ட வண்ணதாசனின் சிறுகதைகள் கற்பனை வாத நிலையில் அமைந்தவை. யதார்த்தத் தளத்தின்மேல் கனவுப் படலத்தை விரித்த கலைஞர்களில் ஒருவராக இவர் கணிக்கப்படுகிருர். 'கலைக்க முடியாத ஒப்பனைகள்' என்ற இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு, அதனுடைய அமைப்புக்காக இந்திய தேசிய விருதைப் பெற்றது. 'தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்' என்பதுஇவரது அடுத்ததொகுப்பு. கல்யாண்ஜி என்ற பெயரில் கவிதைகளும் எழுதும் இவர் ஒரு சிறந்த ஓவியக் கலைஞருமாவார், பாரத ஸ்டேட் பாங்கில் பணிபுரியும் இவரது சொந்தப் பெயர் கல்யாண சுந்தரம். தாமரையில் பொறுப்பாசிரியராக இருந்த தி.க.சிவசங்கரன் இவருடைய தந்தை.

கலாப்பிரியாவின் கவிதைகளில் வாழ்க்கை அனுபவத்தில் இருந்து கிடைக்கும் உண்மைகளைவிட SENTIMENTALISM அதிகம்வெளிப்படுகிறது. இவருடைய வெள்ளம், தீர்த்த யாத்திரை, மற்றுங்கே ஆகிய கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. BANK OF TAMIL NADU என்ற வங்கியில் பணிபுரியும் இவரது இயற்பெயர் சோமசுந்தரம்.

ஸ்பிக் உர நிறுவனத்தில் பணிபுரியும் ஏ.ஏ. ஹெச், கே. கோரியின் சிறந்த சிறுகதைகள் 'தடுமாற்றங்கள் பதினஞ்சு' என்ற தலைப்பில் புத்தகமாக வெளிவந்துள்ளன. இவருடைய கதைகளில் வாழ்வின் உண்மையை நெகிழச் செய்யும் வாழ்வின் நிலைமைகளே வெளிப்பட்டு நிற்கின்றன. வாழ்வின் நிலைமைகளிலிருந்து வாழ்வின் உண்மைகளுக்கு இவர் நகரமுடிந்தால் நன்ருக இருக்கும். சோர்வின்றி இவர் தொடர்ந்து எழுதுவாரானுல் தமிழுக்கு நல்ல சில படைப்புக்கள் கிடைக்கலாம். சிறுகதைகளோடு சில கவிதைகளும் எழுதியிருக்கிருர்.

சென்னையில் தமிழ்நாடு அரசு செய்தித் துறையில் பணியாற்றும் பா. செயப்பிரகாசத்தின் முதல் சிறுகதைத் தொகுப்பு 'ஒரு ஜெருசலேம்' தமிழின் மிகச் சிறந்த சிறுகதைகளை உள்ளடக்கியது. சூடு, ஒரு கிராமத்து ராத்திரிகள் என்ற வேறு இரண்டு தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.

தூத்துக்குடியில் அச்சகம் வைத்து நடத்தி வரும் தேவதேவனின் 'குளித்துக் கரையேருத கோபியர்கள்' என்ற கவிதைத் தொகுப்பு இவரை தர்மு சிவராமு, நாரணுே ஜெயராமன் ஆகிய கவிஞர்களின் வரிசையில் நிறுத்துகிறது. பிக்ஷுமணி கைவல்யம் என்ற தனது இயற்பெயரில் சில சிறுகதைகளும் எழுதியிருக்கிருர்.'

'தேடல்' என்ற இலக்கியப்பத்திரிகையின் ஆசிரியரான எல். ஜோதிநாயகம் தெளிவான சிந்தனையுள்ள மார்க்ஸீயவாதி. சிவசுவின் வெளியீடுகளில் இவரது தரமான படைப்புக்கள் இடம் பெற்றிருக்கின்றன.

தாமரையில் தனது முதல் எழுத்துக்களை ஆரம்பித்த சார்வாகன் அதிகம் வெளித்தெரியாத சிறந்த யதார்த்த எழுத்தாளர். ஹரி சீனிவாசன் என்ற பெயரில் இவர் எழுதிய கவிதைகள் கருதத்தக்கவை. M. B. B. S டாக்டரான இவர் தொழு நோய்ப்பிரிவில் சிறப்பு மருத்துவராக பணிபுரிகிருர். தத்துவச்சார்பு கொள்ளாமையால் முற்போக்கு முகாமினரோடு இவரது உறவு கசப்படைந்துள்ளது.

உமாபதியின் கவிதைகள் தொகுப்பாக வெளிவராத நிலையிலும் யாருடனும் இனம் காண முடியாத வகையில் தனிவகையானவை. நாகர்கோயில் பகுதியில் வங்கி ஒன்றில் பணிபுரிகிருர். இவரது 'வெளியிலிருந்து வந்தவன்' தொகுப்பு தயாராகிறது. தேவதேவன், நாரணுே ஜெயராமன் ஆகியோரது கவிதைகளோடு பொதுத்தன்மையும் அதே நேரத்தில் தனித்துவமும் கொண்டவை தேவதச்சனின் கவிதைகள். தத்துவத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற இவர் தனது பாரம்பரிய வியாபாரமான நகைக்கடை வியாபாரத்தில் ஈடுபட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்பட்டியில் வாழ்ந்து வருகிறார்.

சிறந்த தமிழ் எழுத்தாளர் வரிசையில் இடம் பெறும் நீல. பத்மநாபன் கேரள மின்சார வாரியத்தின் எஞ்சினியர். இவரது 'தலைமுறைகள்' என்ற முதல் நாவல் தமிழின் சிறந்த யதார்த்த நாவல்களில் ஒன்று. பள்ளிகொண்டபுரம், மின்உலகம், உறவுகள் உதயதாரகை என்பன இவரது பிற நாவல்கள்.

விஜயலட்சுமி என்ற பெயரில் பதிப்பகம் நடத்தி இலக்கியப் பணியாற்றி வரும் சிவசுவின் இயற்பெயர் நா. சிவசுப்பிரமணியம் பல சிறுகதை கவிதை தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். தமிழில் எம். ஏ. பட்டதாரியான இவர் வெகுஜன வாசகர்களின் ரசனை பற்றி டாக்டர் பட்டத்துக்கு ஆராய்ச்சி செய்து வருகிறார்.

கணையாழியின் 'முகம்மது கதைகள்' என்ற கதைத் தொடர் எழுதிய காசிபன் திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவர். இவரது அசடு கிரகங்கள் என்ற இரு நாவல்கள் வெளிவந்துள்ளன.

தமிழக இலக்கியத்துறையை வளப்படுத்தி அலங்கரிக்கும் சில பூக்கள் பற்றிய தகவல்களை தந்துள்ளேன். இவை மட்டுமே முழுதான பூங்கா அல்ல. வேறும் பல பூக்கள் பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் எழுதும் எண்ணம் உள்ளது.

—நந்தன—

---

# 'விடுதலை'

-பாலா அசோகன்-

இன்று அந்தப்பெரியவரின் பிறந்ததினம்— எங்குபார்த்தாலும் மகரதோரணம்--வாழை-கமுகு--தென்னை-- அலங்காரம்.. அவர் பேச்சைக் கேட்பதற்கென்றே அலைமோதும் சன சமுத்திரம்.

இன்றைய முக்கியமான நிகழ்ச்சியாக அறுபது வெண் புறுக்கள் பறக்கவிடப்படும்..... ஓ......'இன்று அவரது'அறுபதாவது பிறந்த தினமாச்சே

சென்ற வருடம் இதே திகதியில் 59 வெண்புறுக்கள்... அப்படியாயின் அடுத்தவருடம் ......இப்படியான ஜீவகாருண்ணியப் பிரியர்களின் பிறந்த நாட்கள் வருவதால் எத்தனை உயிர்கள் விடுதலையாகின்றன...

புறுக்கள் பறக்க விடப்படுகின்றன......கரகோஷம் காதை அடைக்கிறது எங்கும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்........ ......

விடுதலையாகிப் பறந்து வந்த புறு ஒன்று என் அருகில் நின்ற மரக்கிளையில் ஆறி அமர்கிறது... .. அதனருகில் சென்ற நான்......" இந்தப் பெரியவர் மேலும் பல்லாண்டுகள் வாழ வேண்டும் வருடா.......வருடம் உன்னைப் போல் பலர் விடுதலை அடைய வேண்டும்" என்றேன்.

அதன் பார்வையிலே ஒரே சோகம்......... ஏன் என்பது போல் பார்த்தேன்.

**5ம் பரிசு பெற்ற மணிக்கதை**

"அப்படியாயின் அடுத்த வருடம் எங்களில் அறுபத்தொருவர் சிறைப்பட வேண்டுமா.........?" என்ற அப் புறு "இவர்கள் ஜீவகாருண்ணிய சீலர் எனப் பெயர் பெற வேண்டி......... இன்று பறக்க விடப் படுவதற்கெனவே நான் சிறைப்படுத்தப் பட்டேன்...... எனது கூட்டத்தினரைப் பிரிந்தேன். கடந்த சில இரவை இரும்புக் கூட்டுக்குள் கழித்தேன்......... சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை........ இதை இவர்கள் தரவேண்டியதில்லை......... எங்கட்கு சுதந்திரம் தரப்படுகின்றது என்றால்.........விடுதலை கிடைக்கின்றது என்றால்........

அது எம்மிடமிருந்து பறிக்கப்பட்டதே. அதற்காக அவரைப் பாராட்டுவதைவிட இவ்வளவு நாளும் எங்களை அடிமைகளாக வைக்கப்பட்டிருந்ததைக் கண்டிப்பதே எங்கள் கடமை... அதை மறந்து பாராட்டுவது மடமை என்றவாறே பறந்து சென்றது அந்த ஐந்தறிவுப் பறவை

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனங்கள் மட்டுமா சாகிறார்கள்? —ஜனநாயகமும்தான்.

[இந்நாட்டில் சர்வஜன வாக்குரிமை பெற்ற 50ம் ஆண்டு விழாவை தர்மிஷ்ட ஜனாதிபதி ஜயவர்தனாவின் அரசு கோலாகலமாகக் கொண்டாடுகின்ற நேரம் அதே வேளையில் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலை யாழ்ப்பாணத்தில் முன்னின்று நடாத்துவதற்கென வந்தவர்கள் இரண்டு அமைச்சர்கள்—சிறில் மத்தியூவும் காமினி திசாநாயக்காவும்; தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோட்டையில் ஓர் இடத்தையாவது ஆளும் கட்சி கைப்பற்ற வேண்டும் என்பதே அமைச்சர்களின் இலக்கு தேர்தல் ஆணையாளரின் பணிப்புகளுக்கு மேல் ஆணைகள் திணிப்பு. சிங்கள அமைச்சர்களுக்கு உதவியாக நின்றது சிங்கள இராணுவம். தில்லுமுல்லுகளுக்கு கேட்க வேண்டுமா? வரலாறு காணாத முறைகேடுகள். இந்த வெட்கமற்ற வேஷதாரரிகளின் திருவிளையாடல்களை கேட்டு ஜனநாயக உலகு சிரிப்பாய் சிரிக்கிறது. சிலவற்றை உதாரணத்திற்குத் தருகிறோம்— சிரிக்கவும் எச்சரிக்கவும்]

வாக்குச் சாவடிகளின் தலைமை அலுவலர்களாகப் பணியாற்றுவதற்கென ஏற்கனவே தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரிகள் திறமையும், தேர்ச்சியும் இதற்கென விசேட வகுப்பில் அறிவுறுத்தலும் பெற்றவர்கள். இவர்களது நியமனம் திடீரென ரத்து செய்யப்பட்டு, சாதாரண பியூன்களும், சிற்றூழியரும் நியமிக்கப்பட்டனர். தமிழ்ச்சாவடிகளில் பணியாற்றிய இவர்களுக்குச் சிங்களம் மட்டுமே தெரிந்தமொழி.

* * *

காலை 7மணி தொடக்கம் பிற்பகல் 4மணி வரை வாக்களிப்பது சட்டமுறை. அனைத்து இடங்களிலும் வாக்குச் சாவடிகள் நண்பகல் 12 மணி வரையிலேயே திறக்கப்பட்டன. பிற்பகல் 2 மணியுடன் பல இடங்களில் மூடி விட்டார்கள். வாக்களிப்பைக் குறைப்பது ஆளும் கட்சிக்கு வாய்ப்பாம். வாக்களிக்க 'கியூவில்' நின்ற வாக்காளர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

* * * *

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய சாவடியில் த. வி. கூட்டணி முகவரை உள்ளே கண்காணிப்பதற்கு சிங்கள அதிகாரி அனுமதிக்கவில்லை. முகவர் வேட்பாளரிடம் முறையிட வேட்பாளர் சென்றபோது அது அமைச்சரின் ஆணையென பதில் வந்தது. பதில் தந்தவர் துப்பாக்கியும் கையுமாக அதிகாரிக்குத் துணை நின்ற இராணுவச் சிப்பாய். அந்தச் சாவடியில் மட்டும் ஆளும் கட்சிக்கு 665 வாக்குகள் கிடைத்தன. கூட்டணிக்கு 201 வாக்குகள் மட்டுமே

* * * *

காரைநகரில் ஒரு வாக்குச் சாடியில் 2 மணியுடன் மூடிவிட்டார்களாம். வெளியே கியூவில் வாக்களிக்கக் காத்திருந்த மக்களுக்கு தலைமை அதிகாரி கூறியது, "புதிய கண்ட ஓண" (நான் தூங்க வேணும்)

* * *

பெரியபுலம் (நல்லூர் தொகுதி) சாவடிக்கு வாக்குப் பெட்டியே அனுப்பப்படவில்லை. பெருந்தொகையான மக்கள் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பினர்.

* * *

வாக்குகளை ஒவ்வொரு சாவடியிலும் எண்ணி தேர்தல் தெரிவு அதிகாரிக்கு அறிக்கை அனுப்பவேண்டும் என்று ஏற்பாடு. பல தலைமை அதிகாரிகள் அங்ஙனம் செய்யாது வாக்குப் பெட்டிகளுடன் தெரிவு அதிகாரியிடம் வந்தனர். அவர்கள் கூறிய காரணம்: "இராணுவத்தினர் எண்ண விடவில்லை"

* * *

ஆறு வாக்குச் சாவடிகளிலிருந்து வாக்குப் பெட்டிகளோ அறிக்கைகளோ அடியோடுவந்து சேரவில்லை. தேர்தல் முடிந்து சிலநாட்களின் பின் தெரிவு அதிகாரி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு வந்து "பாத்றூம்' உட்பட அனைத்து இடங்களையும் துருவிப்பார்த்துச் சென்றாராம். கேட்டதற்கு, 'வாக்குப்பெட்டிகள் சிலவற்றைக் காணவில்லை தேடுகிறேன்" என்றாராம். மத்திய கல்லூரி இராணுவத்தினர் முகாமிட்டிருந்த இடம்.

* * * *

சில வாக்குப் பெட்டிகளை இராணுவத்தினர் தேர்தல் அதிகாரிகளிடமிருந்து பிடுங்கிச் சென்று இராணுவ முகாமில் வைத்து எண்ணினார்களாம், தேர்தல் அவர்களுக்கு பெரிய வேடிக்கையாயிருந்தது.

* * * *

கனரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் வாக்குச் சாவடியிலிருந்து வாக்குப் பெட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியை எண்ணுமல் கொண்டுவந்தார்கள். 'ஏன் எண்ணவில்லை?' என்று தெரிவு அதிகாரி கேட்டதற்கு 'சரி எண்ணிக் கொண்டு வருகிறோம். என்று கொண்டு சென்றுர்கள். பெட்டி அடியோடு திரும்பி வரவில்லை. என்ன ஆயிற்றே?

* * * *

தேர்தல் அன்று காலை எதிர்கட்சித் தலைவர் உட்பட த. வி. கூட்டணி எம். பிக்கள் கைது! தமிழ் இளைஞர்கள் கொலை! கட்டிடங்களுக்குத் தீ வைப்பு! பொலீஸ்—இராணுவ அட்டகாசம்! அவசரகாலநிலை பிரகடனம்! ஊரடங்குச் சட்டம்!

* * * *

இத்தனை கெடுபிடிகள் - நெருக்கடிகள் முறைகேடுகளுக்கு மத்தியிலும் **த. வி. கூட்டணி யாழ்ப்பாண மாவட்டத்தின் பத்து இடங்களையும் தேர்தலில் கைப்பற்றியது.** அரசின் யூ. என். பி. கட்சி கட்டுப்பணத்தை இழந்தது—

**நவா**

# சிறந்த நாவல் 'குருதிமலை' தகவம் தெரிவு

1980 ஆம் ஆண்டினுள் வெளிவந்த ஈழத் தமிழ் நாவல் இலக்கியத்துள் வீரகேசரி வெளியீடான, திரு. தி. ஞானசேகரனின் 'குருதிமலை'யே அதி சிறந்தது எனத் தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) தெரிவு செய்துள்ளது. வேறெந்த நாவல்களும் பரிசுத்தரத்தை எய்தவில்லை என்பதினுல், இந்நாவலாசிரியருக்குத் தகவம் இவ்வாண்டு நாவல் பரிசுக்கென ஒதுக்கிய மொத்தத் தொகையான ரூபா 500.00 யும் வழங்கும்.

புலோலியூர் க. சதாசிவத்தின் நாவல் 'நாணயம்' தகவத்தின் பாராட்டைப் பெற்றுள்ளது. இந்நாவலாசிரியருக்குச் சன்மானமாகத் தகவம் ரூபா 100.00 வழங்கும்.

நாவலாசிரியர்களுக்கான சன்மானம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதப் பிற்பகுயில் தகவம் கொழும்பில் எடுக்கும் 'இலக்கிய விழா' வில் வழங்கப்பட்டு, நாவலாசிரியர்கள் கௌரவிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனத் தகவப் பொதுச் செயலர் திரு. வேல் அமுதன் தெரிவிக்கின்றுர்.

# சர்வஜன வாக்குரிமைப் பொன்விழா: 'ஸ்பெஷல் அயிட்டங்கள்'

* உலகிலுள்ள பாராளுமன்ற ஆட்சிமுறை உள்ள நாடுகளில் எந்த ஒரு நாட்டிலாவது இதுவரை எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இந்தப் புதுமை இங்கேதான் முதன் முதல் தோற்றுவிக்கப்படுகிறது. ஆளுங்கட்சியின் நம்பிக்கையை பெறும் ஒருவர்தான் பிரதமராக இருக்க வேண்டும் என்பது சம்பிரதாயம். ஆனுல் ஸ்ரீலங்காவில் **ஆளுங்கட்சியின் நம்பிக்கையை** பெறும்ஒருவர்தான் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருக்கவேண்டுமாம்—இது தர்மிஷ்ட ஆட்சிப்புதுமைகளில் ஒன்று.

* இலங்கை சுதந்திரமடைந்த பிறகு எந்த ஒரு எதிர்க்கட்சித் தலைவராவது இதுவரை ஒரு நாள் கூட தடுப்புக்காவலில் வைக்கப்படவில்லை. அதுவும் தேர்தல் ஒன்று நடைபெறும் நாளில் எதிர்க்கட்சித்தலைவர் ஒருவர் தடுப்புக்காலில் வைக்கப்பட்ட புதுமையும் இங்குதான் நடைபெற்றிருக்கிறது.

0 திருமதி சிறிமா அம்மையார் அவசரகால சட்டத்தின் கீழ் நீண்ட நாட்கள் ஆட்சி செய்தார் என்பதற்காக அவரின் குடியியல் உரிமையையே பறித்துவிட்ட 'தர்மிஷ்டர்' இப்போது அவசரகால சட்டத்தின் கீழேயே நாடுமுழுக்க தேர்தலை நடத்திவிட்டார். யாழ் மாவட்டத்தை பொறுத்த வரையில் இன்னும் ஒருபடி மேலே சென்று 'பொதுசன பாதுகாப்பு சட்டத்தினையும் அமுலாக்கிவிட்டு தேர்தலை நடத்தியிருக்கிறுர். இவையெல்லாம் சர்வஜன வாக்குரிமையின் பொன்விழாவையிட்டு தர்மிஷ்டர் நடத்திக் காட்டும் புதுமைகள்!

—அரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## உத்தரவாதம் தரமுடியும்!

"இந்த இருபதாம் நூற்றுண்டிலும் இக் கதையின் நாயகி போன்று வாழ்வார்களா என்று யாராவது நம்ப முடியாது சிந்தித் தால் நான் அவர்களுக்காக அனுதாபப்படுகி றேன்"—சபாஷ்! முத்து குணரத்தினம் அவர் களே! பரிசுக்கதை...உண்மை ....நடக்கக்கூடி யதே...என்ருல் அதற்கு உத்தரவாதம் தர முடியும். நம்புவீர்களா? நான் கதாசிரியரைக் கேட்கவில்லே. வாசகர்களைத்தான் கேட்கி றேன். கரிகாலனின் பதில்கள் அபாரம். பல தடவை படித்து, படித்துக்காட்டி பிரதி கையி லில்லாதபோது ஞாபகத்தில் வைத்துக்கூறிப் பெருமைப்படக் கூடியவை. அவ்வப்போது சில வார்த்தைகளை மனம் விட்டுக் கூறித் தமிழ் மனங்களைத் தேற்றிக் கொண்டு வரும் 'அரி' அவர்களின் இம்மாத வேண்டுகோளுக்கு எல் லோரும் செவிசாய்ப்பார்களா? — என்பது தான் வினுக்குறியிடப் படுகிறதே! உகும்...ம்... நிச்சயம் செய்வார்கள்!

தமிழ்ப் புதல்வி
ஜாயா வீதி பம்பலப்பிட்டி

## இது எந்த ஊர் வழக்கமோ?

,'தரிசனங்கள்'' யாழ்ப்பாணச் சூழலில் நிகழும் சமூகச் சீர்கேடுகளையும்' பண்படாத மனித சென்மங்களையும் படம் பிடித்துக் காட் டுகின்றது. மரணச் சடங்குகளில் இறுதிக்கிரி யையாக தேவாரம் படிக்கப்படும். அப்பொ ழுது மேளம், ஒப்பாரி, மாரடிப்பு ஒலிகள் எல்லாம் 'கப்சிப்' என அடங்கிவிடும். இந்த ஒலிகளிடையே தேவார ஒலியும் கேட்டதாக கதையில் இருப்பது எந்த ஊர்வழக்கமோ?

மா. வில்வக்கோன்
அச்சுவேலிவடக்கு.

## தமிழன் வாழ உதவிடு நீ!

தமிழைத் தருவாய் சுடரே நீ!
தாகம் தீர்ப்பாய் சுடரே நீ!
கவிதை தருவாய் சுடரே நீ!
கதைகள் தருவாய் சுடரே நீ!
அறிவுத் தேனைத் தருவாய் நீ!
அகிலம் போற்ற வருவாய் நீ!
செறிவாய் நிலவு சுடரே நீ!
சென்னி மகிழ உலவிடு நீ!
தமிழன் வாழ உதவிடு நீ!
தகைமை இலேயேல் சாடிடு நீ!
இமிழ்சூழ் கடல் வாழ் முத்தெனவே
இலங்கிடு சுடரே! தமிழ் மண்ணில்!.........

செல்வி — அ. கௌரி—
ஆலேயூர்— 1.

## இதயத்தை தொட்ட கதை

ஆசிரியர் தலையங்கம் : ம.வி.சி. வார்த்தை கள் என்பன உண்மைகள் கசக்கும் என்பதற்கு ஓர் சான்ருகும். "நெஞ்சில் புகாத கற்பு" என் நெஞ்சின் ஆழத்திற்கே புகுந்து விட்டது. பெண்மையின் புனிதத்தன்மையை........புனித எண்ணங்களை வெகு அருமையாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார் கதாசிரியர். வரிக்குவரி வனிதையர் நெஞ்சைக் கவரும் வகையில் கதை நகர்த்தப்பட்டிருக்கின்றது. "நம்பிக் கைகள் எவ்வளவுதான் மூடத்தனமாக இருந் தாலும் அவரவர் நினைவுகளில் அவை புனித மானவை" என்னும் வரிகள் என் இதயத்தைத் தொட்டது. கதாசிரியருக்கு என்இதய பூர்வ பாராட்டுக்கள்.

செல்வி கே. தேன்மொழி
தெம்பரவ, அறணயக்க

## கொத்தான மலர்க்கோவை!

அஞ்சன விழிப்பாவை
அட்டையை அலங்கரிக்க
துஞ்சாத கருத்துக்கள்!
துணிவுடன் அணிசெய்ய
கவின்மிகு மணிக்கதை
மலராக மணம்வீச
மொத்தத்தில் சுடரிதழ்
கொத்தான மலர்க்கோவை.

ச. புஷ்பகுமார்
உடுத்துறை தெற்கு,

## ஜனி — நாய் — அக!

நெஞ்சில் புகாத கற்பு........... கதையின் கற்பு மிகு கதாநாயகி 'லேபர் றூம்' இனுள் தன்னுணர் விழந்து மயங்கியிருந்தால் நிச்சய மாக அங்கு ஓர் ஆண் டொக்டர் தான் அழைக்கப் பட்டிருப்பார். நல்லவேளை......... கண்ணகி மதுரை யெரித்த கதை ஆகியிருக் குமோ? — மூன்ருமிட "நன்றி சொல்ல வேண்டும்" மணிக்கதை இரண்டாமிடத்துக் காவது உயர்ந்திருக்க வேண்டும் (வேதனை) — மணியின் "நேர்முகப் பரீட்சை" இலங்கையின் (ஜனி நாய் அக) இழிவான ஓர் உண்மையை உணர்த்துகின்றது — கசாப்புக்கடை............ காவல் படையினரின் காவாலித்தனத்தில் ஓர் காட்சி. உதரத்தில் பதில் உரைக்க உள்ளம் துடிக்கின்றது.

மா. இராஜலிங்கம்
சந்தை வீதி அக்கரைப்பற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவ மணிகளே !

உங்கள் சீருடைகளை துரிதமாகவும் மேலும் பிரகாசமாகவும் சலவை செய்ய
"மில்க்வைற் சலவைப்பவுடரை"
வாங்கி உபயோகியுங்கள்.

மேலுறைகளை சேகரித்து அனுப்பி மில்க்வைற் அப்பியாசக் கொப்பியையும், அறிவுநூல்களையும், மில்க்வைற் செய்தியையும், மற்றும் பெறுமதி வாய்ந்த பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**"மில்க்வைற்"**
த. பெ. எண் - 77, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7233.




## "சுடர்" நண்பர் வட்டம்

சுடர் வட்டம் மூலம் இலக்கிய நண்பர் - நண்பிகளுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்தை அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கலாம். தெளிவான விலாசத்துடன் தங்கள் பொழுதுபோக்கு விபரக்குறிப்புகளுடன் அஞ்சலட்டையில் மட்டுமே அனுப்பிவைக்க வேண்டும்.

**சுடர் நண்பர் வட்டம்**
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

## 'சுடர்' சந்தா விபரம்

ஆறு திங்கள் — 13-00
ஒரு ஆண்டு — 25-00
(தபாற்செலவு உட்பட)

நிர்வாகி அவர்கட்கு,

இத்துடன் அரை/ஒரு வருட சந்தா தொகையான ரூபா ........க்கான மணி ஓடர்/போஸ்டல் ஓடரை அனுப்பி வைக்கிறேன். என்னையும் சந்தாதாரராக சேர்த்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

முழுப்பெயர்: ....................................................

விலாசம்: ....................................................

....................................................

நிர்வாகி,
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை கொழும்பு—12இல் உள்ள சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org